Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2010

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## தேவனுடைய உடன்படிக்கைகள்

கீழ்ப்படிந்து ஜீவித்தல் • வானவில்லின் உடன்படிக்கை • உடன்படிக்கையில் காணப்படுகிற இசைவு • நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?

சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் • பிள்ளை பெறாதவளே மகிழ்ந்து களிகூறு

நான் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் • தீர்க்கதரிசனம் மற்றும் எரேமியா 31ம் அதிகாரத்தின் வாக்குறுதிகள்

**தேவனுடைய உடன்படிக்கைகள்**

# ஆதியிலே

"அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும்..... வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்." - எபேசியர் 2:12

தேவன் அவருடைய உடன்படிக்கைகளை மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டத்திற்கு, அஸ்திபாரமாக அமைத்திருக்கிறார். அவருடைய வாக்குறுதிகளை தடுமாற்றமின்றி நிறைவேற்றுவார் என்பதை காட்டுவதற்காக, இந்த உடன்படிக்கைகளை பயன்படுத்தி, அவருடைய வாக்குத்தத்தங்களை சட்டத்திற்குட்பட்ட ஒப்பந்தங்களாக மாற்றியிருக்கிறார். இந்த ஒப்பந்தங்களுக்கு கீழ் மற்றவர்களையும் தங்களுடைய பொறுப்புகளை ஒப்புவிக்க இந்த உடன்படிக்கைகளை தேவன் பயன்படுத்தியிருக்கிறார். இதில் சில உடன்படிக்கைகள் ஒருதலைபட்சமாகவும் (தேவன் சில காரியங்களை செய்வதற்கு வாக்குறுதியளிக்கிறார்) மற்றவைகள் இருபக்கங்களை (தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற சில விதிமுறைகளை கடைபிடிக்கவேண்டியதாக இருக்கிறது) கொண்டதாகவும் இருக்கிறது.

இந்த ஒப்பந்தங்களின் மூலமாக தேவன் நம்முடைய ஆதி பெற்றோருக்கு நித்திய ஜீவனை பெறுவதற்கான வாய்ப்பளித்தார். மேலும், ஆபிரகாமின் சந்ததி "வானத்தின் நட்சத்திரங்களாகவும்","கடற்கரை மணலாகவும்" இருப்பதற்கும் வாக்குறுதியளித்தார். (ஆதி 2:16, 17, 22:17) தேவன் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை பலவிதமான நிழல்களாகவும், மறைபொருளாகவும் நியாயப்பிரமாணத்தின் சட்டத்தின் மூலம் கொடுத்து, கிறிஸ்துவையும், சபையையும் கிருபையின் பிரமாணத்திற்கு கீழ், மனுக்குலத்தின் இரட்சகர்களாகும்படி வளரச்செய்தார். (எபி 10 :1, கலா 3:16, 29) புது உடன்படிக்கையின் கீழ் தேவன் பூமியில் உள்ள முழு குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார். (எபி 8:10-12)

தேவன் தன்னுடைய மனித சிருஷ்டிப்போடு ஏற்படுத்தின உடன்படிக்கைகளை மையப்படுத்துகிறது. *கீழ்படிந்து ஜீவிப்பது* என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரை ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதாமோடு ஏற்படுத்தின கீழ்படிதலின் உடன்படிக்கையை ஸ்தாபித்ததைக் குறித்து விவரிக்கிறது. பெருவெள்ளம் வந்ததன் காரணத்தையும், மாம்சமான யாவையும் இனி பெருவெள்ளத்தால் அழிப்பதில்லை என்று தேவன் நோவாவிற்கு எதனால் வாக்குறுதி கொடுத்தார் என்பதையும் , *வானவில் உடன்படிக்கை* விவரிக்கிறது.

மனுக்குலத்தின் இரட்சிப்பில் இந்த உடன்படிக்கைகள் எவ்வாறாக ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கிறது என்று *உடன்படிக்கையில் காணப்படுகிற இசைவு* காட்டுகிறது. ஆபிரகாமின் உடன்படிக்கையின் மூலம் பூமியில் உள்ள முழு குடும்பத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை பற்றிய விபரங்கள் - *சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்* என்ற தலைப்பின் கீழ் சம்பாஷிக்கப்படுகிறது. இதை தொடர்ந்து *நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன ?* என்ற பாடம் வருகிறது. இதில் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை இஸ்ரயேல் ஜனங்களை கிறிஸ்துவிடம் வழிநடத்துவதற்கு எப்படியாக பயன்படுத்தப்பட்டது என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆபிரகாமின் உடன்படிக்கைக்குள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவிக்குரிய வித்து, கிறிஸ்துவின் தலை மற்றும் சரீரமாகவும் வளர்ச்சியடைவதே இறுதி பலன் என்பதைக் குறித்து *பிள்ளைபெறாதவளே மகிழ்ந்து களிக்கூறு* என்ற தலைப்பில் வெளிப்படுத்தப்படுகிறது. புது உடன்படிக்கையானது, முழு மனுக்குலத்தையும் தேவனுடைய புத்திரராக மாற்றப்படுவதைக் குறித்து, *ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்* என்ற தலைப்பின் கீழ் தெளிவாக விவரிக்கப்படுகிறது. எரேமியா 31ம் அதிகாரத்தின் வசன வாரியான விளக்கத்தோடு இந்த பிரதி முடிவு பெறுகிறது. இதில் புது உடன்படிக்கையின் கீழ் தேவன் அனைவருக்கும் கொடுக்கும் ஆசீர்வாதங்களை தீர்க்கதரிசியானவர் விவரிக்கிறார்.

ஜனவரி - பிப்ரவரி 2010


**ஆதியிலே** (தேவனுடைய உடன்படிக்கைகள்) ..... 1

**கீழ்படிந்து ஜீவித்தல்** ..... 2

தேவனுக்கும் ஆதாமுக்கும் இடையில் முதலாம் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

**வானவில்லின் உடன்படிக்கை** ..... 5

இனி ஒருபோதும் ஜலப்பிரளயம் ஏற்படாது என்று தேவன் வாக்குறுதியளித்தார்.

**உடன்படிக்கைகளில் காணப்படுகிற இசைவு** ..... 9

தேவனுடைய உடன்படிக்கைகள் மனுஷனுக்கு இரட்சிப்பளிக்க இசைந்து செயல்படுகிறது.

**சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்** ..... 10

ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கை அவருடைய இரட்சிப்பின் முழு திட்டத்தை விவரிக்கிறது.

**நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன?** ..... 14

நியாயப்பிரமாணம் இஸ்ரயேல் ஜனங்களை தனிமைப்படுத்தியது.

**பிள்ளை பெறாதவளே மகிழ்ந்து களிக்கூறு** .....17

கிருபையின் உடன்படிக்கை வாக்குத்தத்தின் சந்ததியை பிறப்பித்தது.

**நான் ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன** .....20

புதிய உடன்படிக்கை அனைவருக்கும் ஆசீர்வாதங்களை கொடுக்கிறது

**தீர்க்கதரிசனங்கள் மற்றும் எரேமியா 31ம் அதிகாரத்தின் வாக்குறுதிகள்** .....26

இஸ்ரயேல் மற்றும் முழு மனுக்குலம் பெறபோகிற ஆசீர்வாதங்களை எரேமியா 31ம் அதிகாரம் கொண்டுள்ளது.

**தீர்க்கதரினத்தில் இன்று**

ஆதாமோடு செய்த உடன்படிக்கை

# கீழ்ப்படிந்து ஜீவித்தல்

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி - நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். "- ஆதியாகமம் 2:16, 17

Tim Thomassen

சில விதிமுறைகளுக்குட்பட்டு,"இரு குழுவினர்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படும் பரஸ்பர ஒப்பந்தம் அல்லது தீர்மானங்களை" உடன்படிக்கை என்கிறோம். வேத வசனங்களில் மனிதனுக்கும், தேவனுக்கும் இடையில் உள்ள சில தொடர்புகளை சுட்டிக்காட்டுவதற்கு இந்த உடன்படிக்கை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

துவக்கத்தில், சாதகமான சூழ்நிலைகள் இருந்தவரையில், ஆதாம் பரிசுத்தமாகவும், தூய்மையாகவும், பாவத்திற்கு தப்பினவருமாக இருந்தார். இப்படிப்பட்ட நிலையில் (சுத்தமான எழுத்து பலகையை போல) அவர் வாழ துவங்கினார். அவர் பூரணமாக இருந்தபோதிலும், கபடில்லாதவரும் அனுபவமற்றவருமாக இருந்தார்.

ஆதாம் ஒரு ஆளுனராக, சுயாதீனம் பெற்று, தன்னுடைய முழு வருங்காலத்தின் பிரதிநிதியாக, சிருஷ்டிக்கப்பட்டபோது, தேவனோடு செய்த ஒப்பந்தத்திற்கு கீழ்பட்டிருந்தார். தேவனுடைய கட்டளைகளை கடைப்பிடிக்கும்படி ஆதாம் கேட்டுக்கொள்ளப்பட்டார். "நன்மை தீமையின் விருட்சத்தின் கனியை புசிக்கவேண்டாம்" என்ற காரியம் அங்கு சோதனையாக வைக்கப்பட்டது. மரணம் இதற்கு தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தது. (ஆதி 2:16,17) ஆனால் இந்த கட்டளையை கீழ்படிந்தால், முடிவில்லா நித்திய ஜீவன் பரிசாக வைக்கப்பட்டது.

மிக அழகான பூக்களையும், பழமரங்களையும், செடிகளையும், கொடிகளையும் மற்றும் அநேக விதமான உணவுகளை தரும் மரங்களையும், அதோடு ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் ஒரு தோட்டத்தில் தேவன் உண்டுபண்ணினார். அதை பண்படுத்தவும், காக்கவும் ஆதாமை அந்த தோட்டத்தில் வைத்தார். (ஆதி 2:15)

அவரால் மிகவும் நேசிக்கப்பட்ட தன்னுடைய துணைவி, புசிக்கவேண்டாம் என்ற மரத்தின் கனியை புசித்தவுடன், தேவனுக்கு விசுவாசமாக இருப்பதா? ஏவாளுக்கு விசுவாசமாக இருப்பதா? என்ற கடினமான ஒரு சூழ்நிலையில் ஆதாம் அகப்பட்டார். தேவன் மற்றும் அவருடைய வார்த்தைகளின் மேல் விசுவாசம் வைப்பதை காட்டிலும் நம்முடைய குடும்பங்கள், நண்பர்கள் அல்லது இதற்கும் மேலாக நாம் முக்கியமாக நினைப்பவைகளுக்கு நாம் அதிக கனத்தை கொடுக்கவேண்டுமா ? என்ற கேள்விகள் இந்நாள் வரைக்கும் தொடர்ந்து வருகிறது.

"இந்நாளில் இருக்கிறதுபோல, நம்மை அவர் உயிரோடே காப்பதற்கும், எந்நாளும் நன்றாயிருக்கிறதற்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த எல்லாக் கட்டளைகளின்படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டார்." (உபா 6:24) என்று மோசே சொன்னார். ஆதாமுக்கு தேவன் தந்தது போல அவருடைய பிள்ளைகளுக்கும் உச்சிதமானவைகளை தருகிறார்.

இரண்டு குழுவினர் முன்வந்து, சில விதிமுறைகளை ஒப்பந்தங்களாக ஸ்தாபித்து, அவைகளை கடைபிடிக்க ஒப்புக்கொண்டு, ஐக்கியப்படுவதையே உடன்படிக்கை என்று பவுல் மாலி என்பவர் - "The Bible as Rising Civilization" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், இந்த உடன்படிக்கை இருத்தரத்தாரையும் ஒன்றாக இணைக்கிறது. ஒருவேளை இதில் ஒரு வகுப்பினர் இந்த ஒப்பந்தங்களை கடைபிடிக்காமல் போனால், இவர்களுக்குள் இருக்கும் பரஸ்பர தொடர்பினால் வரும் நன்மைகளை இழப்பார்கள். தேவன் அனைவருக்கும் ஜீவனை கொடுக்கபோகிறது ரகசியமல்ல. அது விதிமுறைகளின் அடிப்படையில் தான் கொடுக்கப்படும். சொல்லபோனால், சட்டத்தின் ஒரு தொகுப்பு மற்றொரு தொகுப்பை ஈடுகட்டுகிறது. இந்த இரண்டும் சரியாக இருக்கும் பட்சத்தில் மெய்யான நீதி வெளிப்படுத்தப்படும். ஆகவே - நீங்கள் இதை செய்வீர்களானால், நான் அதை செய்வேன், என்னுடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து நடந்தால், நான் உங்களுக்கு ஜீவனை கொடுப்பேன் என்று தேவன் வாக்களித்தார். இப்படியாக, உடன்படிக்கையின் கீழ் கொடுக்கப்பட்ட விதிமுறைகளை கடைப்பிடிப்போருக்கு தேவன் ஜீவனை கொடுக்க வாக்களித்திருக்கிறார்." என்றும் மாலி குறிப்பிடுகிறார்.

"இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியை "ஏதேனின் உடன்படிக்கை" என்று அழைக்கலாம் - என்று மாலி கருதுகிறார். பலுகி பெருகி பூமியை நிரப்பி, அதை ஆண்டுகொள்ளுங்கள் என்றும், அதை பண்படுத்தி, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை தவிர, தோட்டத்தில் உள்ள அனைத்து கனிகளையும் புசியுங்கள் என்றும் தேவன் மனிதனுக்கு சொன்னார். (ஆதி 2, 3) இவைகளை கடைப்பிடித்தால், ஏதேன் என்னும் பரதீஸில் நித்தியமான ஜீவனை பெற்றிருப்பார்கள். ஆனால் அவர்கள் தவறிவிட்டார்கள். ஆதாமும் ஏவாளும் தேவனோடு செய்த உடன்படிக்கையை முறித்து, தங்களுடைய ஜீவனை இழந்து, ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள்."

மேலும், தேவன் ஸ்தீரியை நோக்கி - " நீ கர்ப்பவதியாயிருக்கும்போது உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன், உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை

ஆண்டுகொள்ளுவான்"என்றார். மேலும், ஆதாமை நோக்கி - "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்" என்றும் இதை நீங்கள் செய்வீர்களானால், உங்களை இரட்சிப்பதற்காக ஒரு சந்ததியை (மேசியாவாகிய கிறிஸ்து) வாக்களிக்கிறேன், அவர் வந்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்றும் சொன்னார்.

வேதாகமத்தில் ஓசியா 6:7ம் வசனம் மட்டுமே ஆதாமை உடன்படிக்கையோடு இணைக்கிறது. "அவர்களோ ஆதாமைப்போல் உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய் துரோகம்பண்ணினார்கள்." எபிரெய பதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையாகிய "ஆதாம்" மனிதனுக்கு பயன்படுத்தக்கூடிய ஒரு பொதுவான வார்த்தையாக இருந்தது. ஆகவே ஆதாம் என்ற சொல் மனுக்குலத்தின் தந்தைக்கு மட்டும் அல்ல, தாய்க்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. (ஆதி 5:2)

"உடன்படிக்கை" என்ற வார்த்தையை நாம் வேதாகமத்தில் தேடும்பொழுது, தேவன் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, தாவீது, இஸ்ரயேல் வீட்டாரோடும் மற்றும் இன்னும் அநேகரோடும் செய்த உடன்படிக்கைகளை பற்றி குறிப்புகளை காணலாம். ஆனால், ஆதாமுடன் செய்த உடன்படிக்கையை பற்றி எங்கும் குறிப்பிடாமல் போனாலும், ஆதாம் தேவனோடு ஒரு விசேஷித்த உறவை வைத்திருந்தார் என்பது தெளிவாக காணப்படுகிறது. பரிபூரணமான இந்த பூமியில் எப்படி வாழ வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

ஒப்பந்த பத்திரத்தின் கீழ் அவர் தன்னுடைய பெயரை எழுதவில்லை என்றாலும், தேவனுடைய ஞானமான திட்டங்களை முறித்தால் என்ன நேரிடும் என்பதை அவர் அறிந்திருந்தார். இருந்தபோதிலும், அவர் நடந்துகொண்ட விதமானது, அவர் கற்பனைக்கு அப்பாற்பட்ட பேரழிவை சந்தித்தார்.

மனிதனின் பாவத்தை ஒப்பிட்டு பார்க்கும்பொழுது, தேவனுடைய தண்டனை மிக கொடூரமானது என்று சிலர் எண்ணுகிறார்கள். சாதாரண குற்றத்திற்கு இவ்வளவு கடுமையான தண்டனையா? இது ஒரு கொலை குற்றமா? என்றும் நினைக்கிறார்கள்.

இருந்தபோதிலும், ஒரு தெய்வீக கோட்பாடு கிரியைசெய்து கொண்டிருந்தது - "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான் "(லூக் 16:10) என்று இயேசு இந்த கோட்பாட்டை சுருக்கமாக குறிப்பிட்டார்.

"ஒரு சிந்தையை விதைத்தால், ஒரு கிரியையை அறுப்பாய், ஒரு கிரியையை விதைத்தால் ஒரு பழக்கத்தை அறுப்பாய், ஒரு பழக்கத்தை விதைத்தால் ஒரு குணலட்சனத்தை அறுப்பாய், ஒரு குணலட்சனத்தை விதைத்தால் இறுதி இலக்கை அடையவாய். (Samuel Smiles, 1887, Barletts Familiar Quotations, pp. 922-923)

தேவனுடைய தெய்வீக கற்பனைக்கு கீழ்படிவதை காட்டிலும் ஏவாள் விரும்பியதை செய்ததினால் ஆதாம் பாவம் செய்தார். தேவனுக்கு கீழ்படியாமல் போன முதல் மனிதன் - ஆதாம். தேவனுடைய வார்த்தைக்கும் அவருடைய சித்தத்திற்கும் மேலாக தன்னுடைய மனைவியை வைத்ததினால் அவர் சகல விதமான துன்பங்களையும் அனுபவித்தார். நமக்கும் இப்படிப்பட்ட காரியங்கள் நேரிடும்பொழுது, அநேக வழிகளை தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் கிடைக்கிறது. அந்த தவறுகளிலிருந்து அநேக பாடங்களை கற்றுக்கொள்கிறோம். நாம் செய்த தவறுகளினால் மட்டும் அல்லாது மற்றவர்கள் செய்த தவறுகளிலிருந்தும் நாம் அநேக பாடங்களை கற்றுக்கொள்கிறோம்.

மரணத்தை விளைவிக்கும் முடிவை ஆதாம் தேர்ந்தெடுத்தபோதிலும், அவர் அந்த முடிவை எடுத்த காரணங்கள் மற்றும் அதனால் ஏற்பட்ட அநேக விலையுயர்ந்த பாடங்களையும் நாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

சுயாதீனம் பெற்றிருந்த நிலையில், ஆதாம் அறியாமையில் பாவம் செய்யவில்லை. அநேக ஞானமான முடிவுகளை எடுக்க அவருக்கு அதிகமான வாய்ப்புகள் இருந்தது. ஆனால் இந்த விஷயத்தில் தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர் முடிவு செய்தார். ஒரு கபடற்ற சிருஷ்டியாக இருந்த அவருக்குள் பாவம் செய்வதற்கான எந்த விதமான தீமையான எண்ணங்கள் அவரை தூண்டவில்லை. ஏவாள் சோதனைக்காரனுக்கு செவிகொடுத்தாள், ஆதாம் ஏவாளுக்கு செவிகொடுத்தார்.

அவர்கள் பாவம் செய்தபின், அவர்களின் கண்கள் திறக்கப்பட்டது, தாங்கள் நிர்வாணிகள் என்று உணர்ந்தார்கள். (ஆதி 3:7) இப்பொழுது அவர்கள் இருவரும் தீமையை அனுபவப்பூர்வமாக உணர்ந்தார்கள். குற்ற உணர்வு, துக்கம், அவமானம், துன்பம் போன்ற சகல காரியங்களும் அவர்களை சூழ்ந்தது. அறியாமையுள்ள காலங்கள் முடிந்தது. மனசாட்சியோடும், நல் நடத்தையை பொறுப்போடு வாழவேண்டிய ஒரு புதிய அனுபவத்தின் காலம் துவங்கியது.

ஆதாமின் மீறுதலின் விளைவுகளைக் குறித்து சில பயனுள்ள காரியங்களை அப்போஸ்தலனாகிய பவுல் எடுத்துரைக்கிறார் - "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது, நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது, அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன். ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல, எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே

மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல, அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது. கிருபைவரமோ அநேககுற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது. அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே. ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." - (ரோமர் 5:12-19)

ஆதாம் என்ற ஒரே மனிதனாலே பாவம் இந்த உலகத்திற்குள் நுழைந்தது. ஆதாமின் கீழ்படியாமையின் விளைவு, மிகப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. அதாவது மரணத்தை வருவித்தது.

14ம் வசனம் ஆதாமின் மீறுதலைப் பற்றி சொல்லப்படுகிறது. சட்டத்தின்படி பகிரங்கமாக உறுதிபடுத்தப்பட்ட, தெளிவான கற்பனையை முறிப்பதே "மீறுதல்" என்ற வார்த்தைக்கு பொருளாகும். அதேபோல், 15ம் வசனத்தில் பாவம் என்ற பதத்திற்கு - நீதியையும், சத்தியத்தையும் விட்டு விலகுவது அல்லது தீச்செயல் என்று பொருள்படுகிறது. 16ம் வசனம் "நியாயத்தீர்ப்பு" மற்றும் "ஆக்கினையை" குறித்து பேசுகிறது. 17ம் வசனம் ஆதாமின் கிரியையை விவரிக்க "கீழ்படியாமை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், இவ்வார்த்தைகள் தெளிவான விளக்கத்தை கொடுப்பதில்லை.

ஆதாமின் சுயாதீனமான முடிவினால், அவருடைய சந்ததி அதிகமான விலையை செலுத்தினார்கள். தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் ஆதாமிடமிருந்து வழிவரும் இந்நிலை தொடரும்.

**ஆதாம் மற்றும் அவர் தேவனோடு கொண்டிருந்த தொடர்பு**

ஆதாம் தேவனோடு கொண்டிருந்த தொடர்பிலிருந்து நாம் அநேக விலையுர்ந்த பாடங்களை கற்றுக்கொள்ளலாம்.

1. தேவனுடைய கற்பனைகள் பாரமானவைகள் அல்ல (1யோவா 5:3), ஆனாலும் அவைகளை கடைபிடிக்கவேண்டும். நாம் தேவனிடத்தில் அன்புகூருவதே அவருடைய கற்பனைகளை கடைபிடிப்பது. " உயர்குலபண்புகளாகிய -நன்மை செய்யும் விருப்பம், தூய்மையான அன்பு, மற்றும் சகல விதங்களிலும் பரிசுத்தமாக இருப்பதே மிகச் சிறந்த பண்புகளின் உச்சக்கட்ட வெளிப்பாடாக இருக்கிறது." (Reprints, p. 2093)

2. தேவன் பொய்யுரையாதவர் என்று தீத்து 1:2ம் வசனம் கூறுகிறது. அவர் சொல்லுவதை நேர்த்தியாக செய்பவர். நாம் இதை எண்ணிப்பார்க்கலாம். அவர் வாயிலிருந்து புறப்படும் வசனமும், வெறுமையாக திரும்பாது, அவர் விரும்புகிறதைச்செய்யும். அவர் அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா 55:11)

3. தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். அதுபோல் நாமும் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். (1பேது 4:19, எபி 10 :23)

4. கீழ்படிதலும், ஜீவனும் கையோடு கைகோர்த்துச் செல்லுகிறது. கீழ்படிந்து ஜீவிக்கலாம் அல்லது கீழ்படியாமல் மரிக்கலாம். "மோசே - உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார், அவர் உங்களுக்குச் சொல்லும எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்றான்." (அப் 3:22,23)

5. ஆதாம் விதைத்ததை அவர் அறுத்தார். அதேபோல் நாமும் அறுப்போம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் -"தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான், ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் " (கலா 6:8)

6. ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. (1தீமோ 2:14) "முழு அறிவை பெற்றவராக, தன் முழு விருப்பத்தோடு, துணிந்து கீழ்படியாமையை தேர்ந்துக்கொண்டார். அதற்குபின் அவர் தன்னை மறைத்துக்கொண்டார். அவரை விசாரிக்கும்பொழுது, மனம்வருந்தி மன்னிப்பை கேட்பதற்கு பதிலாக தன்னை தான் நீதிமானாக நிருபிக்க முயற்சித்து, அவர் செய்த குற்றத்தை மற்றவர்கள் மேல் சுமத்தினார். மேலும், அவர் யேகோவா தேவன் மேலும் குற்றம் சுமத்தினார் - " நீ கொடுத்த ஸ்தீரியானவளே கொடுத்தாள், நான் புசித்தேன்" என்றார். (Aid to Bible Understanding,p.33)

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. " (11தீமோ 3:16,17) என்பதை நாம் அறிந்திருப்பதினால், நாம் மிக ஜாக்கிரதையோடு தேவனுடைய வார்த்தைகளை கவனித்து, அதில் உள்ள பாடங்களை கற்றுக்கொள்வோம்.

சர்ப்பம் தந்திரமாக ஏவாளை வஞ்சித்தது. (11கொரி 11:3) அதேபோல், சாத்தானின் தந்திரத்தால் நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் மேல் உள்ள தூய்மையும், உண்மையுமான பக்தியிலிருந்து நாம் நெறிதவறி போய்விடாமல் இருக்கவேண்டும். நம்முடைய இக்கட்டான நேரங்களில், அவர் நமக்கு உதவிசெய்வார் என்று அவர் வாக்களித்த கிருபைக்காக நாம் அவரையே நோக்கிப் பார்ப்போம். (எபி 4:16)

# வானவில் உடன்படிக்கை



"அந்த வில் மேகத்தில் தோன்றும்போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித மாம்சஜீவன்களுக்கும் உண்டான நித்திய உடன்படிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்கிப் பார்ப்பேன்." - ஆதியாகமம் 9:16

Adam Kopczyk

சிருஷ்டிகர் தன்னுடைய சிருஷ்டிகளோடு செய்த உடன்படிக்கையின் வரிசையில், தேவன் ஜலப்பிரளயத்திற்கு பின் உடனடியாக முற்பிதாவாகிய நோவாவுடன் செய்த உடன்படிக்கையே முதலாவதாக இருக்கிறது. இந்த உடன்படிக்கை வரையறுக்கப்பட்டிருந்தாலும், வேதாகமத்தின் உடன்படிக்கைகளான - ஆபிரகாமின் உடன்படிக்கை, நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை மற்றும் புது உடன்படிக்கை ஆகிய இம்மூன்றும் இந்த வானவில் உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டிருப்பதால், இது முக்கியத்துவம் பெறுகிறது. தேவன் முன்னேற்பாடாக நோவாவுடன் செய்த உடன்படிக்கையின் பலனின்றி மற்ற மூன்று உடன்படிக்கைகளும் முழுமையாக நிறைவேறுவதற்கு வாய்ப்பில்லை.

## ஜலப்பிரளயம் உண்டான காரணம்

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு திகைப்பூட்டும் கதையே இந்த ஜலப்பிரளயத்திற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தேவதூதர்கள் மனுஷ குமாரத்திகளை தங்களுக்கு மனைவிகளாக தேர்ந்தெடுத்துகொண்டதைப் பற்றி இது கூறுகிறது. அப்போஸ்தலனாகிய பேதுருவும், யூதாவும் இவர்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். 11பேதுரு 2:4ல் "பாவம் செய்த தூதர்கள்" என்றும் யூதா 6ம் வசனத்தில் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாத... தூதர்கள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

மனுக்குலம் வேகமாக பெருக துவங்கியபோது இவைகள் சம்பவித்தது என்று ஆதியாகமம் 6:1-4 ம் வசனங்கள் விவரிக்கிறது. "தேவ புத்திரராகிய " தூதர்களில் சிலர் மனித சரீரங்களை எடுத்துக்கொண்டு "மனுஷ குமாரத்திகளுக்குள்" தங்களுக்கு மனைவிகளை தெரிந்துகொண்டார்கள். தங்களுடைய ஆவிக்குரிய நிலையில், இந்த பூமியில் தாங்கள் ஒப்புக்கொண்ட கடமைகளை அவர்கள் நிராகரித்தார்கள். ஆதாமின் சந்ததிக்குள் தேவனால் அங்கீகரிக்கப்படாத ஒரு சந்ததியை அறிமுகப்படுத்தி, தேவனுடைய மரணத் தீர்ப்பை மிக தந்திரமாக புறக்கணிக்க அல்லது அவமாக்க திட்டமிட்ட சாத்தானின் வார்த்தைகளுக்கு இந்த தூதர்கள் செவிகொடுத்திருக்கலாம். இவர்களின் சந்ததி பூமியை பயமுறுத்தி ஆண்டு, மனுக்குலத்தை ஒடுக்குகிற பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். இதன் விளைவாக சர்வவல்லவர் காலப்போக்கில் முழு மனுக்குலத்தையும் ஜலப்பிரளயத்தினால் அழித்து விட்டு, ஒரு புதிய யுகத்தை துவங்க முடிவெடுத்தார்.

இந்த சூழ்நிலையில், தேவன் தூதர்களுக்கு ஒரு கட்டுபாட்டை விதித்தார் என்று ஆதி 6:3 ம் வசனம் கருதுவதாக காணப்படுகிறது. ஜலப்பிரளயத்திற்கு முன் பூமியின் மேல் ஆட்சி செய்ய தேவன் இந்த தூதர்களுக்கு வாய்ப்பளித்தார். ஆனால் தேவன் அவர்களை தொடர்ந்து அனுமதிக்கவில்லை. சம்பவிக்கக்கூடிய ஜலப்பிரளயத்தை பற்றி நூற்றியிருபது வருடங்களுக்கு முன் அறிவிக்கப்பட்டது. தூதர்கள் மனந்திரும்புவதற்காக இந்த காலப்பகுதி கொடுக்கப்பட்டது. மேலும், பேதுரு குறிப்படுவதை போல நோவா இக்காலப் பகுதியில் நீதியைப் பிரசங்கித்தார். (11பேது 2:5)

## நிபிலீம்

ஆதி 6:4 ம் வசனத்தில் "நிபிலீம்" என்ற வார்த்தைக்கு இராட்சதர்கள் என்று குறிப்படுகிறார்கள். (எழுத்தாளரின் குறிப்பு - விழுந்துபோன தூதர்களின் சந்ததி இப்பூமியில் வருவதற்கு முன் நிபிலீம்கள் இருந்ததாக ஆதி 6:4ம் வசனம் தெளிவாக குறிப்பிடுகிறது. ஆகவே, ஆதாமின் சந்ததியில் வந்த பலசாலிகளுக்கு இராட்சதர்கள் அல்லது "நிபிலீம்" என்ற பெயர் முன்னதாகவே வழங்கப்பட்டிருக்கவேண்டும். மற்றொரு கோணத்தில் நாம் பார்க்கும் பொழுது விழுந்துபோன தூதர்களுக்கும் இந்த ஒரு சொல் பொருந்தும். ஏனெனில், "நேபல்" அல்லது "எல்லோஹீம்" அல்லது "விழுந்துபோன தெய்வங்கள்" என்ற எபிரெய வார்த்தைகளுக்கு இது சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ) ஆகவே இயற்கைக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த உறவில் பிறந்த பிள்ளைகளுக்கும் இதே பெயர் கொடுக்கப்பட்டது. மேலும், "அந்நாட்களில் இராட்சதர்கள் பூமியிலே இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்ற போது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்" என்று வாசிக்கிறோம். ஆதாம் இழந்த நித்திய ஜீவனை, மனுக்குலத்திற்கு திரும்ப கொடுப்பதே விழுந்துபோன தூதர்களின் நோக்கம் என்று சிலர் நம்புகிறார்கள். ஜலப்பிரளயம் வரைக்கும் நிபிலீம்கள் தொடர்ந்து பிறந்துகொண்டிருந்தார்கள்.

ஆனால் விழுந்துபோன தேவதூதர்களின் திட்டத்தில், ஏதோ பெரும் தவறு ஒன்று நேர்ந்தது. சந்தோஷத்தை வருவிப்பதற்கு பதிலாக இவர்களின் சந்ததி கொடுங்கோலாட்சி புரிந்து, மனுக்குலத்தை ஒடுக்கி அவர்களை கொடுமைப்படுத்தியதாக சொல்லப்படுகிறது. இந்த நிபிலீம்களினால் மனிதர்கள் பட்ட கொடுமைகளையும், உபத்திரவங்களையும் உறுதிசெய்யப்படாத சில மத நூல்களும் (ஜூபிலிக்கள்) மற்றும் ஏனோக்கின் புத்தகங்கள் தெளிவாக விவரிக்கிறது. ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகள் இந்த புத்தகளின் வார்த்தைகளோடு ஒத்துபோகிறது. ஆனால் அதில் நிபிலீம்கள் செய்த துர்கிரியைகள் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. "..இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்." என்று மட்டுமே ஆதி 6:4ல் சொல்லப்படுகிறது. இங்கு பலவான்கள் என்ற வார்த்தை மிக கொடூரமானவர்களுக்கும், வன்முறையான முரட்டு குணமுள்ளவர்களையும் அடையாளப்படுத்தவேண்டும்.

தேவதூதர்கள் முழு அறிவை பெறவும் இல்லை, மேலும் தேவன் அவர்களுக்கு ஒரு எல்லையை விதித்திருக்கிறார் என்று வேத வசனங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. தேவனுடைய திட்டத்தின் சில அம்சங்கள் அவர்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறதென்று 1பேதுரு 1:12 மற்றும் மாற்கு 13: 32ம் வசனங்கள் கூறுகிறது. மனிதன் தாழ்வான சிருஷ்டிகளை ஆளுவதற்கு தனக்குள் இயல்பான உணர்வை பெற்றிருந்தான். தேவனை மகிமைப்படுத்துவது, அவரை கனப்படுத்துவது, அவர்மேல் விசுவாசமாயிருப்பது, அன்பு, தேவனை தொழுதுகொள்ளும் உள்ளுணர்வு, கடந்த காலம் மற்றும் வருங்காலத்தை பற்றி சிந்திக்கும் திறன் - இவையனைத்திலும், பூமியில் உள்ள மற்ற எல்லா சிருஷ்டிப்புகளை காட்டிலும் மனிதன் மட்டுமே அதிகமான மனோசக்தியை பெற்றிருந்தான். சிருஷ்டிப்பின் நேரத்தில் மனிதன் மட்டுமே பயன்படுத்துவதற்காக இவைகள் தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட விசேஷித்த அம்சங்களாக இருந்தது. மனிதனுக்கு இவைகள் தேவனால் அளிக்கப்பட்ட பரிசுகள். சீர்கெட்ட தேவதூதர்கள் திட்டமிடுகையில் இந்த காரியங்களை காணத்தவறினார்கள்.தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது, கண்ணுக்கு புலப்படாத வல்லமையை கொடுத்தார், இதன் காரணமாக ஆதாம் ஒரு மனிதனாகவும், தேவனுடைய குமாரனாகவும் இருந்தார். தேவன் ஆதாமுக்கு கொடுத்த வல்லமையை தூதர்களின் சந்ததி பெறவில்லை.

தெய்வீக சிருஷ்டிப்பிற்கு இடையில் ஒரு ஒழுக்கக்கேடான சந்ததியை தூதர்கள் அறிமுகப்படுத்தினார்கள். ஜலப்பிரளயத்தில் அழிக்கப்பட்ட இந்த சந்ததி, ஆதாமின் வம்சவழியில் வராததினால் இவர்களுக்கு உயிர்த்தெழுதலில் பங்கில்லை. ஆதாமுக்குள் மரித்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவுக்குள் உயிர்பெறுவார்கள் என்ற வசனம் தெளிவாக குறிப்பிடுகிறது. வருங்காலத்தில் ஆதாமின் சந்ததி உயிர்த்தெழப்பட்டு தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு வாய்ப்பளிக்கப்படும்.

விழுந்துபோன தூதர்களின் சந்ததி சகல விதமான தீமைகளால் நிறைந்திருந்தார்கள். தேவன் பூமியை கண்ணோக்கும்பொழுது - மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினதையும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார். (ஆதி 6:5)

"அப்பொழுது கர்த்தர் - நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிற வைகளை நிக்கிரகம்பண்ணுவேன், நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்." (ஆதி 6:7) பெருவெள்ளத்தைப் பற்றி முன்னதாகவே தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு, நோவாவால் நூற்றியிருபது வருடங்கள் அதைப் பற்றி பிரசங்கிக்கப்பட்டது. இயற்கை சீற்றத்தின் விளைவாக, பூமி வெறுமையானது. பேழைக்குள் இருந்தவர்களை தவிர ஒருவரும் தப்பவில்லை.

பாவமான உலகத்தை மீண்டும் சீர்படுத்தி, நீதியையும் சத்தியத்தையும் நிலைநாட்டி, ஒரு புதிய காலத்தை துவங்க, குறிப்பிட்ட காலப்பகுதிகளில், பூமியின் மேல் இப்படிப்பட்ட பேரழிவை அடிக்கடி ஏற்படுத்துவார் என்று வெறுமையாக்கப்பட்ட பூமியை பார்த்த நோவா, சிந்தித்திருக்கவேண்டும்.

ஸ்தீரியின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று இதற்கு முந்தி ஏவாளிடம் சொல்லப்பட்ட வாக்குறுதிக்கு என்ன நடந்தது? இப்படிப்பட்ட அழிவுகள் இனி தொடர்ந்து நடக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது என்று நோவா நிச்சயமாக யோசித்திருக்கவேண்டும்.

இக்கேள்விகளுக்கு பதிலளிக்கவும், இச்சம்பவங்கள் நடந்ததில் தேவனுடைய கிருபையான நோக்கங்களைப் பற்றியும், அவருடைய திட்டத்தின் கோட்பாடுகளை வெளிப்படுத்தவும், தேவன் நோவாவுடன் நிபந்தனைகளுக்கு உட்படாத ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

## நோவாவின் பலிபீடம்

பூமியின் மேல் வந்த பேரழிவிற்குபின், பத்திரமாக பேழையை விட்டு வெளியே வந்த நோவா, ஒரு பலிபீடத்தை கட்டி, அதில் சுத்தமான மிருகங்களையும், சுத்தமான பறவைகளையும் தேவனுக்கு தகனபலியாக செலுத்தினார் என்று ஆதி 8:20ம் வசனத்தில் வாசிக்கிறோம். "நீ சுத்தமான சகல மிருகங்களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமில்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக ஒவ்வொரு ஜோடும், ஆகாயத்துப் பறவைகளிலும், சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில் சேர்த்துகொள்" (ஆதி 7: 2,3) என்று தேவன் முன்னதாகவே நோவாவிடம் சொல்லியிருந்தார்.

நோவா செலுத்தின சுகந்த வாசனையை தேவன் முகர்ந்தபொழுது, அதிகாரப்பூர்வமான ஒரு உடன்படிக்கையை பிரகடனம் பண்ணினார். இதை மிக முக்கியமான தருணத்தில் அதாவது ஒரு புதிய உலகத்தின் பிறப்பிற்கு முன் தேவன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

கடந்த உலகத்தின் தீமைகள் தேவனுடைய பார்வையிலிருந்து சுத்திகரிக்கப்பட்டது. தூய்மையான உலகத்தில் பரிசுத்தமான மனுக்குலம், தேவனுடைய புதிய தெய்வீக fpUigapdhy் தங்களுடைய வாழ்க்கையை துவங்கினார்கள். "சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர் - "இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை, மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையம் சங்கரிப்பதில்லை." ( ஆதி 8 : 21) புதிய உலகத்திற்கு இது ஒரு விசேஷித்த தருணமாக இருந்தது. இரட்சிப்பின் தெய்வீக திட்டத்திற்கு தொடர்புடைய விசித்திரமான சம்பவங்களை இனி எதிர்நோக்கவேண்டியதாக இருந்தது. அந்த உலகத்தின் வருங்காலம் முழுவதும் அந்த பலிபீடத்தை சுற்றி நின்ற நோவா மற்றும் அவருடைய மூன்று குமாரர்களின் மேல் அமர்ந்தது. ?

இனி இந்த உலகத்தை அழிப்பதில்லை என்ற தெய்வீக வாக்குறுதியை பதிவு செய்வதற்காக தேவன் நோவாவுடன் இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார். மனுக்குலமும், மிருகங்களும் - இனி இப்படிப்பட்ட பேராபத்து வருவதில்லை என்ற தைரியத்தோடு, தங்கள் தங்கள் இனத்தை விருத்தியாக்க துவங்கினார்கள். வாக்குறுதிகளின் நிபந்தனைகள் ஆதி 8-21,22 மற்றும் ஆதி 9-11-16 ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நோவா மற்றும் அவருடைய மூன்று குமாரர்கள், சேம், காம், யாபேத்தோடும், அவர்களுடைய

பிள்ளைகளோடு மட்டும் தேவன் அவருடைய உடன்படிக்கையை ஏற்படுத்தாமல் மற்ற தாழ்வான சிருஷ்டிகளோடும் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். மகா பெரிய சிருஷ்டிகர், ஆகாயத்து பறவைகளோடும், பசுமையான நிலத்தின் ஆடுமாடுகளோடும், காட்டில் வாழும் மிருகங்களோடும் தேவன் அவருடைய வாக்குறுதியை விசுவாசத்தோடு ஏற்படுத்தினார். மிருகங்களின் உலகத்திற்கு கிடைத்த தெய்வீக பாதுகாப்பை பற்றி யோனா 4:11ம் வசனத்தில் வாசிக்கலாம் - "... இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்." தேவன் மிருகங்களை பராமரிப்பதைக் குறித்து நம்முடைய ஆண்டவராகிய இயேசு லூக்கா 12:6ம் வசனத்தில் குறிப்பிடுகிறார் - "இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா ? அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லை."

உடன்படிக்கையின் விதிமுறைகள் தேவனால் கொடுக்கப்பட்டது. அதைப் பெற்ற அந்த சிறிய கூட்டம் அவைகளை ஏற்றுக்கொண்டு தங்கள் பணியைத் துவங்கினார்கள். தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இனி வரும் மனுக்குலத்தை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கு இவர்களின் சந்ததியே ஆதாமின் சந்ததியாக தொடர்ந்து பெருகியது. ஆனாலும் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு பிறகு தான் இவைகள் நிறைவேறவேண்டியதாக இருந்தது.

## நோவாவுடன் செய்த உடன்படிக்கையின் அம்சங்கள்

427 வருடங்களுக்கு பின் ஏற்படுத்தப்பட்ட ஆபிரகாமின் உடன்படிக்கையை போல நோவாவின் உடன்படிக்கையும் இருந்தது. சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை போல இதுவும் விதிமுறைகளுக்கு உட்படாததாக இருந்தது. முதன்மையான ஒப்பந்தம் நோவாவுடன் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், நோவா இனி வரக்கூடிய காரியங்களை நடத்துவார் என்பதற்காக அல்ல, அவருடைய விசுவாசம் மற்றும் கீழ்படிதலினாலே தேவன் இதைச் செய்தார். ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையும் இதே நோக்கத்தையுடையதாக இருக்கிறது. ஒரு "வித்தை" கொண்டுவருதற்கும், அந்த வித்தின் வழியாக உலகத்தின் முழு குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பதற்காகவும் ஒரு முன் அறிவிப்பை தேவன் ஆபிரகாமுக்கு செய்த உடன்படிக்கையில் உத்திரவாதமாக கொடுத்தார்.

இந்த பூமியையும், அதின் நடைமுறைகளையும் எந்த விதமான அழிவின்றி காப்பதற்கும், அந்த வித்து செயலாற்றுவதற்கு ஏற்ற சுற்றுபுறசூழ்நிலைகளை நித்தியமாக ஏற்படுத்தவும், பூமியல் உள்ள முழு குடும்பங்களுக்கு ஒரு அருமையான வீட்டை நிலைநிறுத்தவும் தேவன் நோவாவுடன் முன்னதாகவே அந்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வதிக்கப்படுகிறவர்களுக்கு என்றும் அழியாத வளமிக்க பூமி தேவைப்பட்டது. இப்படிப்பட்ட செழிப்பான பூமியை தருவேன் என்று தேவன் நோவாவுக்கு செய்த உடன்படிக்கையின் மூலம் உத்திரவாதம் கொடுத்தார். இதற்கான ஆதார வசனங்கள் ஆதியாகமம் 9ம் அதிகாரத்திலே தெளிவாக விவரிக்கிறது. மேலும், பிரசங்கி 1:4 ம் வசனத்தில் -"பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கும்" என்றும் இனி இவ்விதமான ஜலப்பிரளயத்தினால் உலகம் அழியாது என்றும் ஒரு உத்திரவாதத்தை பெறுகிறோம். "இந்த தீமையான உலகத்தில்" சாத்தானுடைய கோட்பாடுகள் அகன்று "நீதி வாசமாயிருக்கும்" கோட்பாடுகள் இந்த உலகத்தில் ஸ்தாபிக்கப்படும் என்பதை நோவாவோடு தேவன் செய்த உடன்படிக்கை விளக்குகிறது. (கலா 1:4, எபி 2:5, 11பேது 3:13)

இன்றைய உலகத்தில், அணு ஆயுத யுத்தங்களினால், இந்த உலகம் பாழாகி போய்விடுமோ என்று எதிர்பார்க்கும் பயம் நிறைந்த மனிதர்களின் மத்தியில் தேவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கை நமக்கு ஆறுதல் அளிக்கிறது. வரலாற்றில், ஜலப்பிரளயத்தின் போது மனித இனத்திற்கு ஏற்பட்ட ஒரு பயங்கரமான உச்சகட்டத்தை போல இனி சம்பவிப்பதில்லை என்ற தெய்வீக உத்திரவாதத்தை பெற்றிருக்கிறோம். சகல விதமான தீய சக்திகள் மனுக்குலத்தை பாழாக்குவதற்கு முன், தேவன் குறித்த காலத்தில், அவருடைய சர்வவல்லமைகளை செயலாற்றி, அவர் அவைகளை அழித்து போடுவார். மகா உபத்திரவத்தின் காலத்தைக் குறித்து பேசும்பொழுது, இச்சம்பவங்களை நம்முடைய ஆண்டவராம் இயேசு குறிப்பிடுகிறார் - "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்துகொள்ளப் பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். " (மத் 24:22)

## வானவில்

விபரங்கள் சொல்லப்படுவதை பார்க்கும்பொழுது, ஜலப்பிரளயத்திற்கு பின் மேகத்தின் மேல் தோன்றின வானவில் ஒரு புதிய இயற்கை காட்சியாகவே இருக்கிறது. இனி ஒருபோதும் பூமியை ஜலத்தினால் அழிக்கமாட்டேன் என்று தேவன் வாக்களித்ததற்கு அடையாளமாக இந்த வானவில் தோன்றியது. ஜலப்பிரளயத்திற்கு முன் தோன்றியிருந்தால், அந்த வானவில்லுக்கு எந்த விதமான அர்த்தமும் இருந்திருக்காது. அதற்கு முன் எந்த விதமான மழையும் பெய்யவில்லை என்பதையும் நாம் அறிவோம். அப்போது வானவில்லும் தோன்றவில்லை. சூரிய கதிர்கள் பூமியின் மேல் சுற்றியிருக்கும் தண்ணீர் வலையங்களுக்குள் ஊடுருவி பாயும்போது எந்த விதமான வானவில்லும் காணப்படுவதற்கு வாய்ப்பில்லை. எனவே பூமியை சுற்றியிருந்த தண்ணீர் மண்டலம் முழுமையாக பூமியின் மேல் விழுந்தது. மேகத்தின் மேல் தோன்றின இந்த வானவில் நோவா மற்றும் அவருடைய குடும்பத்தாரின் மனதில் ஆழமான ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கவேண்டும். காலப்போக்கில் மனிதர்கள் பலுகி பெருகுகையில், அந்த வானவில்லை, பாதுகாப்புக்குரிய அடையாளமாகவும், தேவனுடைய நேர்மைக்கான குறியுமாக அதை கண்டார்கள். (ஏசா 54:9-10)இது நோவாவின் உடன்படிக்கைக்கும், வெகு நாட்களுக்கு பின் ஜனங்களின் இரட்சிப்பின் திட்டத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும், கொடுக்கப்பட்ட தெய்வீக வாக்குறுதி நிறைவேறுவதற்கும் உள்ள தொடர்பை நமக்கு கொடுக்கிறது.

வானவில் இந்த உடன்படிக்கைக்கு சாட்சியாக இருக்கிறது. ஏனெனில், ஆதி 9:12 ம் வசனத்தில் - "நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற

உடன்படிக்கையின் அடையாளமாக.." என்று குறிப்பிடுகிறார். மேலும் 16ம் வசனத்தில் - ".. நித்திய உடன்படிக்கையை ..." என்றும் அறிவிக்கிறார். இனி இந்த பூமி ஜலத்தினால் அழிக்கப்படுவதில்லை என்பதற்கு இதை விட அருமையான அடையாளம் எதுவும் இருக்கமுடியாது.

இந்த பூமியை அழித்த அந்த ஜலத்தினால் அந்த வில் தோன்றியது. ஆனால் இப்பொழுது தேவன் ஆதியிலே இந்த பூமியை சிருஷ்டித்ததன் நோக்கத்தை முத்திரிக்கவும் இந்த வில் பயன்படுகிறது. நோவாவையும், பேழைக்குள் இருந்த மிருகங்களையும் காப்பாற்றியதால், அவரை கண்ணோக்கிக்கொண்டிருந்த தூதர்களுக்கு முன்பாகவும் தேவன் இதை வாக்களித்தார். ஏனெனில் தூதர்களும் நம்மை நோக்கி கொண்டிருக்கிறார்கள் என்ற வசனம் குறிப்பிடுகிறது. (1கொரி 4:9)

சூரிய கதிர்களை மழை துளிகள் பிரதிபலிக்கும் போது காணக்கூடிய கண்கள் ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து பார்க்கும் போது வானவில் தென்படுகிறது. ஒவ்வொரு கண்களுக்கும் ஒளிகதிர்களின் பிரதிபலிப்பு அழகான வானவில்லாக தோன்றுகிறது. ஏனெனில், பூமியை சுற்றி எந்த விதமான தண்ணீர் மதகுகளும் இல்லை. ஆகவே இனி ஒருபோதும் ஜலப்பிரளயம் வருவதில்லை. ஆச்சரியமான காரியம் என்னவெனில், நிறமாலையின் தொகுப்பாக வானவில் தோன்றினாலும், ஏழு வெவ்வேறு நிறங்களை ஒவ்வொரு மனித கண்களுக்கும் புலப்படுகிறது. இவைகள் ஆவிக்குரிய அர்த்தங்களை உடையதாக இருக்கவேண்டும். சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம் மற்றும் செங்கருநீல நிறங்கள் காணப்படுகிறது. ஏழு என்ற எண் முழுமையை அடையாளப்படுத்துகிறது. ஆகவே வானவில் தேவனுடைய பரிபூரணமான திட்டத்தை சித்தரிக்கவேண்டும். இந்த ஏழு நிறங்களும் கலந்தால் நமக்கு அது வெள்ளை நிறமாக இருக்கும் சூரிய வெளிச்சத்தை கொடுக்கிறது. வெண்மை, பரிசுத்தத்திற்கும், கிறிஸ்துவின் நீதிக்கும் அடையாளமாக இருக்கிறது. எதிர்மாறாக, கறுப்பு பாவம் மற்றும் மரணத்தை அடையாளப்படுத்துகிறது.

இந்த ஏழு நிறங்களும் ROY G BIV என்ற ஆங்கில வார்த்தைகளின் எழுத்துக்களின் வரிசையில் அமைந்துள்ளது -

(Red) சிவப்பு - சிவப்பு இரத்தத்தின் நிறமாக இருக்கிறது. பரிபூரணமான நீதியை நிலைநாட்டுவதற்காக, இயேசு அனைவரின் பாவங்களுக்காக தன்னுடைய இரத்தத்தை கொடுத்ததை அடையாளப்படுத்துகிறது. ஈடுபலியாக செலுத்தப்பட்டதற்காக இந்த நிறம் அங்கு நிற்கிறது. ஏனெனில், இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

(Orange)ஆரஞ்சு - இது சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தின் கலவை. மஞ்சள் தேவனுடைய தெய்வீக குணத்தை காட்டுகிறது. ஆகவே இந்த நிறங்களின் கலவை - மனிதனுக்காக தேவன் ஏற்படுத்தின அவருடைய பரிபூரணமான தெய்வீக திட்டத்தை அடையாளப்படுத்துகிறது. எனவே ஆரஞ்சு நிறம் தேவன் மனுக்குலத்தின் மேல் வைத்திருக்கும் இரக்கத்தை காட்டுகிறது.

(Yellow) மஞ்சள் - மஞ்சள் பொன் நிறமாக இருக்கிறது. ஆகவே தேவனையும், தெய்வீகத்திற்கு சம்மந்தப்பட்ட சகலத்தையும் இந்த நிறம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

(Green) பச்சை - நீலம் மற்றும் மஞ்சள் நிறத்தில் கலவையே பச்சை நிறம். தேவனுடைய வல்லமையும் இயேசுகிறிஸ்துவின் விசுவாசமும் (நீலம்) இணைந்து பூமியில் உள்ள சகல ஜனங்களுக்கும் நித்திய ஜீவனை அளிக்கும். ஆகவே நீண்ட கால அளவில், நித்தியமான இந்த பூமி பசுமையாக இருப்பதை பச்சை நிறம் காட்டுகிறது.

(Blue) நீலம் - நீலநிறம் விசுவாசத்தை அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய உத்தமத்தைக் குறித்து நமக்கு நினைப்பூட்டுகிறது. நீல நிறத்தில் காணப்படுகிற வானம் ஒருபோதும் மாறாதது போல தேவன் என்றைக்கும் மாறாதவர் என்பதை காட்டுகிறது. "நான் கர்த்தர், நான் மாறாதவர்" (மல்கி 3:6)

(Indigo) கருநீலம் - நீலம் மற்றும் செங்கருநீலம் என்ற இரு நிறங்களுக்கு இடையில் இந்த நிறம் உள்ளது. இந்த நிறம்இயேசுவின் இரத்தம் (சிவப்பு) மற்றும் அவருடைய விசுவாசத்தின் (நீலம்) மூலம் நம்முடைய பாவங்களை தணித்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. (1யோவ 2:1,2 ரோம 3:25) மேலும் கருநீலம் மற்றும் செங்கருநீலம் ஆகிய இரண்டும் இராஜரீகத்தையும் அடையாளப்படுத்துகிறது.

(Violet) செங்கருநீலம் - நீலம் மற்றும் சிவப்புக்கு இடையில் உள்ள நிறமாக இது இருப்பதினால், இதை செங்கருநீலம் என்று சொல்லப்படுகிறது. வானவில்லில் இது மிகவும் சிறிய அலைநீளம் கொண்டது. உண்மையான செங்கருநீலம் வானவில்லில் காணப்படுவதில்லை. வானவில்லில் பக்கப்பக்கமாக காணப்படுகிற இரண்டு நிறங்களின் கலவையாக இருக்கிறது - நீலம் தேவனுடைய உத்தமத்தையும்சிவப்பு ஈடுபலியையும் அடையாளப்படுத்துகிறது. செங்கருநீல நிறத்தை இராஜாக்கள் பயன்படுத்தியதால், இது இராஜரீகத்தையும் அடையாளப்படுத்துகிறது.

## முடிவுரை

இனி மாம்சமான யாவும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்படுவதில்லை என்ற தெய்வீக வாக்குத்தத்தமாக வானவில் இருக்கிறது. இந்த உலகம் தன்னுடைய சகலவிதமான கனிப்பொருட்களின் பொக்கிஷங்கள், எல்லா விதமான காய்கறிகள், மிருகஜீவன்களோடும் இனி வரக்கூடிய முடிவில்லா மகிமையான எதிர்காலத்தில் நித்தியமாக இருக்கும் என்பதை நோவாவுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை உறுதியளிக்கிறது. இந்த யுகத்தில் ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு கீழ் அல்லது வருங்காலத்தில் புது உடன்படிக்கைக்கு கீழ் தேவனிடத்தில் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுப்பவர்கள், தேவனுக்கும் அவருடைய நித்தியமான விசுவாசத்திற்கு பாத்திரமாக இருப்போம் என்று உறுதியாக இருக்கலாம்.

இந்த உலகத்தை இரட்சித்தவர் அதற்கு இராஜாவும், ஆண்டவருமாக இருப்பார். இந்த ஆளுகை வேறு எந்த ஜனத்திற்கும் கொடுக்கப்படுவதில்லை. மேசியா தெய்வீக சித்தத்திற்கு எதிராயிருப்பவைகளை ஜெயித்து, சகலத்தையும் கீழ்ப்படுத்தியபின் தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு தேவனுக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுத்து, அவருக்கு கீழ்ப்பட்டிருப்பார்." (1கொரி 15:28)

பரலோகம் மற்றும் பூமிக்குரிய

# உடன்படிக்கைகளில் காணப்படுகிற இசைவு



Ernie Kuenzli


தேவனுடைய வாக்குறுதிகள் அனைத்து உடன்படிக்கைகளையும் இருக்கமாக ஒன்றோடு ஒன்று பின்னப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு மனிதனின் இரட்சிப்பை நிறைவேற்றுகிறது. மனிதனின் இரட்சிப்பிற்காக தேவன் செய்திருக்கும் ஆயத்தங்கள் அனைத்தும், படத்தில் காட்டப்பட்டது போல ஆபிரகாமின் உடன்படிக்கையோடு தொடர்புடையதாகவும், அந்த நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாகவும் இருக்கிறது. இந்த உடன்படிக்கையில், "வானத்தின் நட்சத்திரங்கள்" என்று அடையாளப்படுத்தும் ஆவிக்குரிய இரட்சிப்பும், "கடற்கரை மணல்" என்று பூமிக்குரிய இரட்சிப்பும் எடுத்துக்காட்டப்படுகிறது. (ஆதி 22:16-18) "வானத்தின் நட்சத்திரங்கள்" என்ற வாக்குத்தத்தம் ஆதி 26:4ம் வசனத்தில் ஈசாக்குக்கு மீண்டும் கூறப்பட்டது. ஈசாக்கு - இயேசுவையும் அவருடைய சபையையும் அடையாளப்படுத்துகிறார் என்று பவுல் தெளிவாக விவரித்துள்ளார். (கலா 3:16,29) ஆகவே " வானத்தின் நட்சத்திரம்" என்ற உடன்படிக்கையின் ஆவிக்குரிய சந்ததியாகிய இயேசுவையும் சபையையும் அடையாளப்படுத்துகிறது. "கடற்கரை மணலை" பற்றிய வாக்குத்தத்தம் "பூமியின் தூளைப் போல" என்று யூத ஜனங்களின் தகப்பனான யாக்கோபுக்கு மீண்டும் வாக்களிக்கப்பட்டது. (ஆதி 28:13,14 ஆதி 13:16) யாக்கோபின் சந்ததி கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் பரவி பலுகி பெருகுவார்கள் என்று தேவன் வாக்களித்தார். காலப்போக்கில் முழு மனுக்குலமும் பலுகி பெருகியது. ஆபிரகாமின் உடன்படிக்கையில், யாக்கோபின் சந்ததி இஸ்ரயேலையும் மற்ற பூமிக்குரிய சந்ததி புறஜாதிகளையும் அடையாளப்படுத்துகிறது.

சட்டத்திற்கு மீறி நடந்ததாலும், ஒரு இரட்சகர் தேவை என்று உணர்த்துவதற்காகவும், ஆபிராகமின் உடன்படிக்கைக்கு 430 வருடங்களுக்கு பின் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை கொடுக்கப்பட்டது. (கலா 3:17,24) "நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்...." (எபி 10:1) அதனுடைய கற்பனைகள், பலிகள், ஆசாரியத்துவம் மற்றும் மத்தியஸ்தரும், தேவன் மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக ஏற்பாடு செய்திருக்கும் மிக பெரிய ஆயத்தங்களை சித்தரிக்கிறது. மேசியாவின் முதல் வருகையில் இஸ்ரயேல் ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்வதற்காகவும், ஒரு தேசமாக இருக்கும் இவர்கள் ஆசாரிய இராஜ்யமாகவும், பரிசுத்த ஜாதியாகவும், ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய சந்ததியாகவும் மாறுவதற்கு இந்த நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. (யாத் 19:6)

இயேசுவின் முதல் வருகையின்போது, ஆபிரகாமின் உடன்படிக்கையின் கிருபையின் அடிப்படையில், ஆவிக்குரிய சந்ததி வளர துவங்கியது. (கலா 4:28, எபி 6:17-20) ஒருவர் இந்த சந்ததியில் பங்கு பெறுவதற்கு பலியின் மூலமாக, அதாவது ஒருவருடைய பூமிக்குரிய ஜீவியத்தை ஆவிக்குரிய வாழ்க்கைக்காக அர்பணித்து, உடன்படிக்கைக்குள் நுழையவேண்டும். (சங் 50:5) இந்த காரியத்தை இயேசு தன்னுடைய பூலோக உழியத்தில் நடத்தி காட்டினார். அவருடைய கீழ்படிதலினாலே, ஆவிக்குரிய சந்ததியின் முதலாவதாகவும், "நித்திய இரட்சிப்பின் ஊற்றாகவும்", "மெல்கிசிதேக்கின் முறைமையின்படி பிரதான ஆசாரியருமாக" இடம்பெற்றார். (எபி 5:8-10) ஒருவன் முழு விருப்பத்தோடு, தன்னுடைய சிலுவை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்றி, அவருடைய சாயலை அணிந்தால், இந்த ஆவிக்குரிய சந்ததியின் ஒரு அங்கமாகலாம். (மத் 16:24, ரோம 8:28) "நீங்கள் கிறிஸ்துவுடையவர்களானால், நீங்கள் ஆபிரகாமின் (ஆவிக்குரிய) சந்ததியும், வாக்குத்தத்தத்தின்படி(ஆபிரகாம்) சுதந்தரவாளிகளுமாக இருக்கிறீர்கள். (கலா 3:29)

ஆவிக்குரிய சந்ததி நிறைவுபெற்றவுடன், ".. இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார்..." (ரோம 11:26) மீட்பராகிய கிறிஸ்துவும் அவருடைய சபையும், இஸ்ரயேல் மற்றும் யூதாவுடன் தேவனுடைய புது உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருப்பார்கள். (எரேமி 31:31-34, எபி 8:8-12) இந்த உடன்படிக்கையின் கீழ், இஸ்ரயேல் சுத்திகரிக்கப்பட்டு, ஒரு புதிய இருதயத்தில், ஒரு புதிய ஆவி கொடுக்கப்படும், அப்பொழுது அவர்கள் தேவனுடைய ஜனங்களாகவும், ஆபிரகாமின் உடன்படிக்கையின் பூமிக்குரிய சந்ததியாக இருப்பார்கள். (ஏசே 36 :25-27) இந்த உடன்படிக்கையின் கீழ் சகல புறஜாதிகளும் மனமுகந்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, பூமிக்குரிய வித்தின் ஒரு அங்கமாக மாறிடுவார்கள். (ஏசா 2:3, சகரி 8:23)

உடன்படிக்கைகளின் கட்டமைப்பானது, ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியின் ஒரு பகுதியாக ஆதாம் மீண்டுமாக ஆசீர்வதிக்கப்படுவார். இவ்வாறாக, தேவனுடைய விதிமுறைக்குட்படாத உடன்படிக்கை ஆபிரகாமின் வழியாக முழுமையாக நிறைவேற்றப்படும்.



ஆபிரகாமின் உடன்படிக்கை

# சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்

"நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும் ....." - ஆதியாகமம் 22:17

Aaron Kuehmichel

வேதாகமத்தில் சொல்லப்பட்ட உடன்படிக்கைகளில் -ஆபிரகாமின் உடன்படிக்கை மட்டுமே முழுமையாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. "நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதி 22:16-18)

மனித சிருஷ்டிப்புக்காக தேவன் கொண்டிருக்கும் சித்தத்தையும், இயேசுவின் மூலம் அவர் கொடுக்கப்போகிற இரட்சிப்பையும், அதன் மூலமாக மனிதர்கள் பெறும் ஆசீர்வாதத்தையும் இந்த வாக்குத்தத்தம் உரைக்கிறது. தேவன் அங்கீகரிக்கும் விதத்தில் ஆபிரகாமின் விசுவாசமும், பக்தியையும் இருந்ததை அவர் கண்டதால், மனுக்குலத்திற்கு சேரவேண்டிய ஆசீர்வாதங்கள் ஆபிரகாமின் வழியாக சென்றடையும் படி அவருக்கு வாய்ப்பளித்தார். ஆனால் ஆபிரகாம் அந்த "உடன்படிக்கையின்" ஆசீர்வாதங்களை உடனடியாக பெறவில்லை.

"கர்த்தர் ஆபிராமை நோக்கி - நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்." (ஆதி 12:1-3) தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த முதல் வாக்குறுதி இதுவே.

காலங்கள் கடந்த போது வாக்குத்தத்தமும் விரிவானது. "பூமியின் தூளைப்போல" என்ற வார்த்தை ஆதி 13:15,16 ம் வசனங்களின் காணப்படுகிறது. "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன், ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்" "வானத்தின் நட்சத்திரங்கள்" என்ற வாக்கியம் அதற்குபின் சேர்க்கப்பட்டது. "... நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி - உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். " (ஆதி 15:5)

தேவனுடைய வாக்குத்தத்தம் விதிமுறைக்கு உட்படாததாக இருந்தாலும், ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தையும், அர்ப்பணிப்பையும் நிரூபிக்கவேண்டியதாக இருந்தது -"மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்ற அவனோடே சொல்லப்பட்டிருந்ததே, இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் மரித்தோரிலிருந்துஎழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான், மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்." (எபி 11:17-19) ஏனெனில், "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை, ஆபிரகாம் முழுமையாக விசுவாசித்து தன்னுடைய விசுவாசத்தை கிரியையின் மூலம் வெளிப்படுத்தினார். (ஆதி 22:16 -18)

"நட்சத்திரங்கள்" மற்றும் "மணல்" என்ற வார்த்தைகள் எண்ணிக்கைக்கு மட்டும் குறிப்பிடப்படாமல், இன்னும் ஆழமான அர்த்தங்களை உடையதாக இருக்கிறது என்று வேதமாணவர்களாகிய நாம் அறிந்ததே. "நட்சத்திரங்கள்" ஆபிரகாமின் பரலோக சந்ததியையும் (முதற்பலனான சபை), "மணல்" ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியையும் (பூமியின் முழு மனுக்குலமும் இதில் அடங்கும்) சித்தரிக்கிறது.

**நட்சத்திரங்கள்**

தேவன் ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளையை வாக்களித்தார், அதற்கான ஒரு வாக்குறுதியை ஆபிரகாம் தேவனிடத்தில் கேட்டார். (ஆதியாகமம் 15) அந்நேரத்தில் ஆபிரகாமுக்கு பிள்ளையில்லாதிருந்தது. ஆகையால், அவர் வீட்டில் பிறந்த எலியேசர் வழியாக இந்த ஆசீர்வாதம் நிறைவேறுமோ என்று ஆபிரகாமுக்கு தோன்றியது. (ஆதி 15:2,3) ஆனால் - "அப்பொழுது .... இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான்.." என்று தேவன் மீண்டும் சொன்னார். (ஆதி 15:4) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குழந்தை, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை சித்தரிக்கும் ஈசாக்கு என்ற பவுல் கூறுகிறார். (கலா 3:16, 29, 4:28) தொடர்ந்து தேவன் -"... நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்ற சொல்லி, பின்பு அவனை நோக்கி - உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்." (ஆதி 15:5) ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி ஈசாக்கை அடையாளப்படுத்துவதை போல, நட்சத்திரங்களும் இதே காரியத்தை சித்தரிப்பதால், ஈசாக்கின் உடன்படிக்கை வானத்தின் நட்சத்திரங்களோடு தொடர்புடையதாக இருப்பதை நாம் காணலாம்.

ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதியை ஈசாக்கிடம் தேவன் மீண்டும் சொல்லும் வரைக்கும் ஈசாக்கோடு நட்சத்திரங்களுக்கு இருந்த தொடர்பு தொடர்ந்தது. ஏனெனில், ஈசாக்கின் சந்ததியை விவரிப்பதற்கு தேவன் நட்சத்திரங்களின் அடையாளத்தை மட்டுமே பயன்படுத்தினார் - "....நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார். " - (ஆதி 26:4,5)

தேவன் ஆபிரகாமுக்கு பின் ஈசாக்கிடம், அந்த சந்ததியைக் வாக்குத்தத்தம் செய்ததைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுலும் எழுதினார் - "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன, சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" - (கலா 3:16)

பவுலினால் எழுதப்பட்ட கிறிஸ்து யார் ? "கிறிஸ்து" என்பதற்கு "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று பொருள். மேலும், இந்த சொல் இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் குறிக்கும். இந்த கருத்தை பவுல் 1கொரி 12:27ம் வசனத்தில் நிரூபித்தும் இருக்கிறார். "..நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." இயேசுவை தலையாக கொண்ட முழு சரீரத்தை" பற்றி மனதில் வைத்தவராக தொடர்ந்து விவரிக்கிறார் - ".. நீங்கள் கிறிஸ்துவினுயைடவர்களானால், ஆபிராமின் சந்ததியாராயும், வாக்குத்தத் தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள். " (கலா 3:29) இங்கு இயேசு மற்றும் அவரைபின்பற்றுபவர்களையும் "ஆபிரகாமின் சந்ததி" என்று மிக தெளிவாக விளக்குகிறார்.

ரோமர்களுக்கு எழுதின நிருபத்தில் பவுல் தேவனுடைய புத்திரர்களாக நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவைக் குறித்து சம்பாஷிக்கிறார். அதில் ஆதாமுக்காக இயேசு கொடுத்த ஈடுபலியின் மேல் உள்ள விசுவாசத்தினால், தேவன் நம்மேல் வைத்த கிருபையின் விளைவாக, அவர் நம்மை ஏற்றுக் கொண்டதை தெளிவாக காட்டுகிறார். (ரோம 3:22-26) ஆபிரகாம் விசுவாசித்ததினால், இரக்கம் பெற்றது போல, நம்முடைய விசுவாசத்தினால் இரக்கம் பெறுகிறோம் என்ற உண்மையை அவர் இங்கு வலியுருத்துகிறார். விசுவாசத்தின் முக்கியத்துவத்தை குறித்து மீண்டுமாக நான்காம் அதிகாரத்தில் கூறப்படுகிறது -"அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காகமாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்படும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்." (ரோம 4:23-25) மேலும் ".. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்." (ரோ 5:1,2) என்று பவுல் கூறுகிறார்.

தேவன் நம்மை ஏற்றுக்கொள்வதற்கு, இயேசுவின் பலியின் மூலம், கொடுக்கப்பட்ட விலைக்கிரையமே, அடித்தளமாக இருக்கிறது என்று பவுல் குறிப்பிடுகிறார். மேலும், தன்னுடைய குமாரனாகிய ஈசாக்கை பலியாக கொடுக்கவேண்டும் என்ற சோதனை ஆபிரகாமுக்குமுன் வைக்கப்பட்ட காரியம், இயேசுவின் பலியைச் சித்தரிக்கப்பட்டது -"இதோ உலக தோற்றத்திற்கு முன் அடிக்கப்பட்ட ஆடு" (வெளி 13:8, 1பேது 1:19,20) குறித்த காலம் நிறைவேறினபோது, ஆபிரகாமின் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தின் பாவத்திற்காக தன்னையே முழு விருப்பத்தோடு பலியாக ஒப்புக்கொடுத்தார். (மத் 20:28,1தீமோ 2:5,6) ஆபிரகாம் பலிபீடத்தின் மேல் ஈசாக்கை பலிசெலுத்தினதாகவும், அதை தேவன் அங்கீகரித்தார் என்பதை எடுத்துக்காட்ட, ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தவேண்டிய இடத்தில் ஒரு ஆட்டுக்கடாவை தேவன் கொடுத்தார். இப்படியாக, ஆபிரகாமின் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் நீதிமானாக்கப்பட்டது போல, தேவனுடைய குமாரனனின் பலியை விசுவாசிப்பவர்கள் நீதிமானாக்கப்படுவார்கள் என்ற நிரூபனம் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய கிருபையினால் ஆபிரகாமுக்கு உடன்படிக்கை கொடுக்கப்பட்டது. வாக்களிக்கப்பட்ட அந்த வித்தாகிய கிறிஸ்துவின் தலை மற்றும் சரீரம், பூமியில் உள்ள முழு குடும்பத்தாருக்கும் ஆசீர்வாதங்களை வருவிப்பார்கள். விசுவாசத்தினால் ஆபிரகாம் உடன்படிக்கையை பெற்றுக்கொண்டார், விசுவாசத்தினால் அவர் நீதிமானாக்கப்பட்டார், மேலும் விசுவாசத்தினால் சாராள் குழந்தைகளை பெற்றெடுக்கும் தகுதிகளை இழந்து, நீண்ட காலம் சென்ற பின் கர்ப்பவதியாகி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளையை பெற்றெடுத்தாள்.

மேலும், ஆபிரகாமின் முதல் மனைவியாகிய சாராள், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட உடன்படிக்கையை சித்தரிக்கிறாள் என்பதை பவுல் கலாத்தியர் 4:21-31 ம் வசனங்களில் குறிப்பிடுகிறார். உண்மையான சந்ததி, மிக பெரிய நிழலாக காணப்படும் ஈசாக்கு - இயேசுவே என்றும் பவுல் காட்டுகிறார்."அந்த சந்ததி கிறிஸ்துவே" (கலா 3:16) ஆனால் இந்த சந்ததி இயேசுவை மட்டும் குறிக்கும் என்று வாசிப்பவர்கள் தவறாக புரிந்துகொள்கிறார்கள். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலா 3:29) என்று பவுல் விவரித்துள்ளார்.

தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்துவே அந்த சந்ததி. இவர்கள் அனைவரும் வாக்குத்தத்தத்தின் சந்ததியும், ஒரே தாய் அல்லது ஒரே உடன்படிக்கையின் கீழ் வரும் பிள்ளைகள். ஒரு பிள்ளையின் தலைக்கு ஒரு தாயும், சரீரத்திற்கு வேறொரு தாயும் இருக்க வாய்ப்பில்லை. இதே காரியம் ஆவிக்குரிய சந்ததிக்கும் பொருந்தும் என்று பவுல் பேசுகிறார். இயேசு மற்றும் சபை, சாராளுக்குள் அடையாளப்படுத்தும், ஆபிரகாமின் சந்ததி என்றும் குறிப்பிட்டார். ஈசாக்கு சாராள் வழியாக வந்த வாக்குத்தத்தத்தின் பிள்ளையை போல, நாமும் "ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்." (கலா 4:28) "எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள், இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்..." (எபி 2:11)

ஆகவே, ஆண்டவரோடு ஒன்றாக இருப்பதற்கு, ஒரே தந்தை மற்றும் ஒரே தாயின் (உடன்படிக்கை) பிள்ளைகளாக, ஒரே ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறார்கள். இவர்கள் அவரோடே ஞானஸ்நானம் பெற்று, பாத்திரத்தில் பானம் பன்னி, பாடுகளை பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, மரிக்கிறார்கள். இப்படியாக, தலையாகிய இயேசுவோடு அனைத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள். (மாற் 10:38,39, ரோ 6:3,4, கலா 2:20, 1பேது 4:12,13) ஏனெனில், அவர்கள் இந்த உலகில் ஜீவிக்கும்பொழுது எல்லாவற்றிலும் இயேசுவை பின்பற்றினதினால், அவருடைய மகிமையில் ஒரு பங்கு அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டு, அவருடன் சுதந்தரவாளிகளாக இருப்பதற்கும், ஒரே விதமான உயிர்த்தெழுதலை அடையவும், இயேசு பெற்ற அழியாமையின் நிலைக்கு உயர்த்தப்பட்டு இயேசுவோடுக்கூட இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளுமாகவும் மகிமையில் வெளிப்படுவார்கள். (ரோ 6:5, பிலி 3:10,11, 1தெச 2:14, 1பேது 2:9,10, 1பேது 4:13, வெளி 20 :4,6)

ஈசாக்கு விசுவாசத்தினால் பெற்றெடுக்கப்பட்டது போல தேவனுடைய கிருபையினால், அவருடைய வல்லமையை பயன்படுத்தி , நிழலான ஈசாக்கை அடையாளப்படுத்தும் நிஜமான கிறிஸ்துவாகிய தலை மற்றும் சரீரத்தை விசுவாசத்தின் மூலமும்

தேவனுடைய கிருபையினால் அவருடைய பரிசுத்த ஆவியினாலும் ஜெனிப்பித்தார்.

இந்த சந்ததியின் ஒவ்வொரு உறுப்பினரும், இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி, அவருக்கு கீழ்படிந்து, விசுவாசத்தை நடைமுறைப்படுத்தி, இந்த உலகப்பிரகாரமான காரியங்களுக்கு தங்களை அந்நியரும் பரதேசிகளுமாக எண்ணி, தங்களுடைய சரீரங்களை தேவனுக்கு ஏற்ற பரிசுத்தமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். (மத் 16:24,25, ரோ 12:1, 1கொரி 5:7, 1பேது 1:3) இந்த படிகளை வரிசையாக, விசுவாசத்துடன் கடைப்பிடிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு தனிநபர்களும் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, முத்திரிக்கப்படுவதால், கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒரு அங்கமாக மாற்றப்படுவோம். இப்படிப்பட்ட தனிநபர்களின் உடன்படிக்கையைக் குறித்து சங்கீதக்காரன் எழுதியுள்ளார் - "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார். (சங் 50:5)

**மணல்**

ஆபிரகாம் ஈசாக்கை பலியாக ஒப்புகொடுத்தபோது இந்த வார்த்தை முதல் முதலில் காணப்படுகிறது. இயேசுவின் மரணம், இந்த உலகத்திற்காக கொடுக்கப்பட்ட ஈடுபலியை இந்த சம்பவம் சித்தரிக்கிறது. மேலும், ஆபிரகாமின் பரலோகம் மற்றும் பூமிக்குரிய சந்ததியும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் இது உறுதியளிக்கிறது.

இஸ்ரயேல் ஜாதியையும், முழு மனுக்குலத்தையும் பூமிக்குரிய சந்ததியில் இடம்பெறும். ஏனெனில் -"மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன், அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்." (ரோ 11:25) என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆவிக்குரிய சந்ததியின் எண்ணிக்கை புறஜாதிகளிடமிருந்து நிறைவடைந்தபின்பு, இஸ்ரயேலில் அனைவரும் மீட்கப்படுவார்கள் என்று பவுல் தெளிவாக குறிப்பிடுகிறார். இஸ்ரயேல் தேசம் பூமிக்குரிய சந்ததியின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள் என்ற தீர்க்கதரிசியாகிய ஓசியா குறிப்பிடுகிறார் - "என்றாலும், இஸ்ரயேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும், நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்." (ஓசி 1:10). "அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்" என்று வெளி 20:3ம் வசனத்தில், சீர்பொருந்தப்பட்ட உலக ஜனங்களைப் பற்றி சொல்லப்படுகிறது.

ஆயிரவருட ஆட்சியில் அல்லது கிறிஸ்துவின் ஆளுகையில், மாம்ச இஸ்ரயேலர்களின் குருட்டாட்டம் நீக்கப்படும். அப்பொழுது, இஸ்ரயேலரின் மூலம் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். தேவனுடைய மகிமையின் அறிவாகிய வெளிச்சம் இந்த முழு உலகத்தையும் நிரப்பும். குருடர்கள் (ஆவிக்குரிய கண்கள் மற்றும் மாம்ச கண்கள்) பார்வையடைவார்கள். மேலும் "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாக உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. (ஏசா 2:2)

ஆயிரவருட ஆட்சி நிறைவடைந்தவுடன், மீண்டுமாக, சகலமும் சிருஷ்டிகரோடு இசைந்திருக்கும். மனுக்குலம் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை அறிந்துகொண்டு, அவரை கனப்படுத்தும். (பிலி 2:9-11) மேலும் தேவன் மனுக்குலத்தின் கண்ணீர் யாவையும துடைத்துவிடுவார். (வெளி 21:4) "உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று கர்த்தர் கற்பித்த ஜெபம் மெய்ப்பிக்கப்படும். (மத் 6:10) கர்த்தரின் மகிமையால் இந்த பூமி நிறைந்திருக்கும்.(எண் 14:21) அக்காலத்திலிருந்து மனிதன், நித்திய சமாதானத்தையும், சுகத்தையும், சந்தோஷத்தையும் ஜீவனையும், பாதுகாப்பையும் பெறுவான். "உனக்குள் பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்" என்று தேவன் ஆபிரகாமுக்கு நீண்ட காலங்களுக்கு முன் கொடுத்தவாக்குத்தத்தம் நிறைவேறத்தக்கதாக, பூமியில் உள்ள முழு குடும்பங்களும் உண்மையில் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ஆதி 22:18)

# நியாயப் பிரமாணத்தின் நோக்கம் என்ன?

"இவ்விதமாக......நியாயப்பிரமாணம் நம்மைக் (யூதர்கள்) கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது." கலாத்தியர் 3:24 Bill Dutka

நவீன யூத வழக்கத்தின்படி, பிறப்புரிமை தாயிடமிருந்து வருகிறது. இந்த வழக்கத்திற்கு இசைவாக, பவுல் கலாத்தியர் 4:22-31ம் வசனங்களில் ஒரு வாதத்தை அமைக்கிறார். அதில் ஆபிரகாமின் இரண்டு மனைவிகள் - சாராளும் மற்றும் ஆகாரும் இரண்டு உடன்படிக்கைகளை அடையாளப்படுத்துகிறார்கள். இது உருவகமாக சொல்லப்பட்டிருந்தாலும், ஒரு உருவகம் கொடுக்கக்கூடிய வரலாற்று உண்மைகளுக்கும் அதிகமான விளக்கத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த வசனங்கள் சாராளை வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு தாயாகவும், ஆகாரை நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு தாயாகவும் ஒப்பிடப்படுகிறது.

வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு உட்பட்ட பிள்ளைகளை சாராளின் பிள்ளைகள் என்றும் அவர்கள் சுயாதீனம் உள்ளவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு உட்பட்ட பிள்ளைகளை ஆகாரின் பிள்ளைகள் என்றும் அவர்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பவுல் இதைக் குறித்து சொல்லும்பொழுது, இஸ்மயேல் இயற்கையாக பிறந்தவன் என்றும் ஈசாக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி அற்புதமாக பிறந்தவன் என்றும் குறிப்பிடுகிறார்.

ஈசாக்கு சுயாதீனமுள்ளவனாக இருந்தான் ஏனெனில், அவனுடைய தாய் சுயாதீனமுள்ளவளாக இருந்தாள். ஆனால் இஸ்மயேல் அடிமையானவளிடத்தில் பிறந்ததினாலே அவன் அடிமையாக இருந்தான். நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை அடிமைதனத்தை கொடுத்ததினாலும், அவர்களின் பிள்ளைகளாகிய யூத ஜாதி, நியாயப்பிரமாணத்திற்கு கீழ் கொடுக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களையும், வாய்ப்புகளையும் சுதந்தரித்துகொள்ளமுடியாமல் போனதால், பவுல் இந்த உடன்படிக்கையை ஆகாரோடு ஒப்பிட்டு பேசினார்.

மேலோட்டமாக, இந்த நியாயப்பிரமாணம், துவக்கத்திலிருந்து இஸ்ரயேல் தேசத்தை வழிநடத்தியதை நாம் கவனிக்கலாம். இந்த நியாயப்பிரமாணம் இஸ்ரயேலர்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துவதாகவும், சேர்ந்தபின் பரிசுத்த ஆவியினால் அவர்கள் இருதயத்தில் விருத்தசேதனம் அடையும் வரைக்கும் அவர்களை வழிநடத்தியது என்று புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டில் உள்ள அனைத்து வசனங்களும் எடுத்துக்காட்டுகிறது. "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." (ரோ 8:2) என்று பவுல் எழுதுகிறார். அதாவது "பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து" விடுதலை பெற்றேன் என்று பவுல் எதை பொருள்ப்படுத்துகிறார் ? நியாயப்பிரமாணம் பாவம் இன்னதென்று புரிந்துகொள்ளுதலை கொடுத்தது என்றும், இந்த பரிப்பூரணமான நிலையின் அடிப்படையில் நியாயம் விசாரிக்கப்பட்டால் அது மரணத்தை வருவிக்கும் என்றும் அவர் விளக்குகிறார்.

தொடர்ந்து -"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோ 3:20) என்றும் பவுல் வலியுருத்துகிறார்.

நற்பண்புகளில் வளர்ச்சியடைய இந்த நியாயப்பிரமாணம் மிக பிரம்மாண்டமாக வடிவமைக்கப்பட்டது. நீதியை படிப்பிக்கிற உபாத்தியராக இருந்தது. " ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை. இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேன். பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே. முன்னே நியாயப்பிரமாணமில்லா தவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன், கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக் கேதுவாயிருக் கக்கண்டேன். பாவமானது கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது. ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது. இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல, பாவமே எனக்கு மரணமாயிற்று, பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும்,

அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று. (ரோ 7:7-13) "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோ 6:23)

யாக்கோபின் வழிவந்த இஸ்ரயேலின் பன்னிரெண்டு கோத்திரங்களுக்கு நித்திய ஜீவனை கொடுப்பதற்கு அல்ல, மாறாக ஒரு சுத்திகரிக்கப்பட்ட நிலைமையை அடைய அவர்களுக்கு தோரா (Tora )கொடுக்கப்பட்டது. இந்த ஜாதியில் மேசியா பிறக்க கிட்டத்தட்ட ஆயிரவருடங்கள் சென்றது. இவர்களை தேவன் பரிசுத்த ஜாதியாக எப்படி நிலைநிறுத்தினார் (யாத் 19:6) ? இது ஒரு அடிப்படையான கேள்வி. ஆபிரகாமின் வழிவருபவர்களை இராஜரீகமான ஆசாரியர்களாகவும், ஒரு பரிசுத்த ஜாதியாகவும் உருவாக்குவதற்கு, தூதர்கள் வழியாக இந்த கற்பனைகளை ஒரு சட்டப்பூர்வமான தொகுப்பாக கல்லில் எழுதிக்கொடுத்தார்.

இந்த சட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கற்பனைகள் - இந்த ஜாதிகளுக்கு ஒரு வழிக்காட்டியாக இருந்தது. இவர்களின் கையைப்பிடித்து சரியான பாதையில் நடத்தியது. நியாயப்பிரமாணம் என்ற பாடத்தில், பவுல் தன்னுடைய விவாதத்தை இசைவாகவே எழுதியுள்ளார். இந்த நியாயப்பிரமாணம் தேவனுக்கு முன்பாக யாரையும் நீதிமானாக்குவதில்லை, ஆனால் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் உபாத்தியாராக இருந்தது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லபோனால், அவர்களை நீதியின் பாதையில் நடத்தக்கூடியதும், தேவனுடைய உடன்படிக்கைக்கு புறம்பான காரியங்களில் இவர்கள் சிக்கிகொள்ளாமல் இருப்பதற்காகவும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. (நீதி 22:6, 1I தீமோ 3:15)

இந்த ஒரு காரியத்தை பவுல் கலாத்தியர்களுக்கு குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதன் நோக்கத்தை அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு புரியவைத்தார். இங்கு ஆபிரகாமுடன் ஆதியிலே செய்த உடன்படிக்கையையும், அதன் நோக்கத்தையும், கிறிஸ்துவ யுகத்தில் இதன் நன்மைகளையும், இயேசு மட்டுமே இதை பூரணமாக கடைப்பிடித்து, இரட்சிப்பவர் என்பவைகளையும் தெளிவாக விவரிக்கிறார். மற்றபடி நியாயப்பிரமாணம் ஒருவரையும் பூரணப்படுத்தாது.

பவுல் ரோமாபுரிக்கு எழுதின கடிதத்தில் -"இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை." (ரோ 3:20) என்று நமக்கு அறிவிக்கப்படுகிறது. "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது." (கலா 3:24)

மீண்டும் ஒரு முறை "நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன ?" பாவம் இன்னதென்று உணர்ந்துகொள்வதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்று பவுல் கூறுகிறார். நியாயப்பிரமாணத்தின் மைய கருத்து இதுவே. இதன் மூலம் ஒருவர் பாவத்திற்கு விலகி, தேவனிடத்தில் சேருவதற்கான ஒரு நிலையை வளர்த்துகொள்ளமுடியும். இதனால், இஸ்ரயேல் ஜாதியாரை பரிசுத்த சந்ததியாக தங்களை உருவாக்கிக்கொள்ள உதவிசெய்தது. உண்மையில், நியாயப்பிரமாணத்தின் சில அம்சங்கள், அதாவது வருடாந்தரம் செலுத்தப்படும் ஒப்புரவாக்குதலின் பலிகள், ஒவ்வொரு தனிப்பட்ட நபரின் பாவங்களும், அதனால் முழு தேசத்தின் மீறுதல்களும் மன்னிக்கப்பட்டு தேவனோடு ஒப்புரவாக்க பயன்படுத்தப்பட்டது. (லேவி 23:27)

இப்படியாக, ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கைக்கு 430 வருடங்களுக்குபின் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் அவர்களை தனியாக பிரித்து, புறஜாதிகளிடமிருந்து தங்களை பரிசுத்த ஜாதியாக காத்துகொள்ள உதவிசெய்தது. (யாத் 19:6) இப்பொழுது நியாயப்பிரமாணத்தின் நன்மைகளை எண்ணிப்பார்க்கலாம். ரோமர்களுக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இவைகளை குறிப்பிட்டபொழுது, அவர்களுக்கு எல்லா விதத்திலும் நன்மையாக இருந்தது. இக்காரியங்கள் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு மட்டும் அல்ல, உணவு முறைகள், தூய்மை, மற்றும் உறவுகள் போன்ற காரியங்களை குறித்த அடிப்படையான போதனைகள் தேவனுடைய உடன்படிக்கைக்கு புறம்பான காரியங்களில் இவர்கள் சிக்கிக்கொண்டு பாதிக்கப்படாத அளவிற்கு இவர்களை காத்துக்கொண்டது.

நியாயப்பிரமாணத்திலிருந்து நீதி பிறக்குமா என்றும் அப்படியிருந்தால் கிறிஸ்துவிற்கு எந்த விதமான அவசியமும் இருக்காதே, என்பதைக் குறித்தும் பவுல் கலாத்தியர்களுக்கு எழுதின நிருபத்தில் விவாதித்திருக்கிறார். நியாயப்பிராணத்தை ஒருவராலும் பூரணமாக கடைபிடிக்கமுடியாது என்று ரோமர்களுக்கு எழுதின நிருபத்தில் அவர் எழுதியுள்ளார். "எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையை அற்றுபோனார்கள்." தேவ நீதி நியாயப்பிரமாணத்திலிருந்து வரவில்லை என்று இக்காரியம் நிரூபிக்கிறது. (ரோ 3:23) இந்த ஜாதியை விசேஷித்தவர்கள் என்று யேகோவா தேவன் சொல்லியிருக்கிறார் - " நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரயேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்" (யாத் 19:6)

இந்த கற்பனைகளையும், கட்டளைகளையும் அவர்களை ஆசாரிய ராஜ்யமாகவும், பரிசுத்த ஜாதியாகவும், இந்த உலகத்தைவிட்டு பிரித்து தேவனோடு ஒப்புரவாக்கியது. இந்த நியாயப்பிரமாணம் தேவனிடம் தங்களை அர்ப்பணிக்க உதவியது.

மேசியாவின் வருகைக்கு பின் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் முடிந்துவிடும் என்பதை இவைகளின் மூலம் நாம் புரிந்துக்கொள்ளலாம். ஏனெனில், நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை நிறைவேறியது. பரிசுத்த ஆவி அவர்களின் புதிய வழிக்காட்டியாக இருந்து அவர்களை கிறிஸ்துவுக்குள் போதித்து வழிநடத்துகிறது. இனி அவர்கள் ஒருபோதும் முழுமையாக தேவனுக்கு தங்களை அர்ப்பணிக்க வாய்ப்பில்லை. ஏனெனில், தன்னுடைய மணவாளனாம் கிறிஸ்துவுக்காக ஏற்ற மணவாட்டியை மீதியிந்த யூதர்களிடமிருந்தும், புறஜாதிகளிடமிருந்தும் தேர்ந்தெடுத்து, அவருடைய உடன்படிக்கையை நிறைவேற்றபோகிறார்.

இந்த நியாயப்பிரமாணத்தின் சட்டங்கள் இஸ்ரயேல் ஜனங்கள், கடலோரங்களில் இருக்கும் கானானியர்களிடமிருந்தும், தெற்கில் உள்ள அமலேக்கியர்களிடமிருந்தும், ஏத்தியர்களிட மிருந்தும், எபூசியர்களிடமிருந்தும், மலைகளில் வாழந்த எமோரியர்களிடமிருந்தும் தங்களை பரிசுத்தமாக காத்துகொள்ள உதவிசெய்தது. எப்படிப்பட்ட, புறஜாதிகளின் வல்லமை அவர்களை சூழ்ந்திருந்ததை பாருங்கள். இவைகளை எதிர்க்க தேவனுடைய சர்வ்வல்லமை எவ்வளவு பலமுள்ளதாக இருந்திருக்கவேண்டும். தங்களை சூழ்ந்திருந்த உலகத்தின் ஜனங்கள், அவர்களின் விசுவாசத்தை கவிழ்ந்துபோடாதபடிக்கு மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்ட சட்டங்கள் அவர்களை காத்துக்கொண்டது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும், இந்த ஜனங்களை மோசேயின் நியாயப்பிரமாணம் அவர்களை சீர்பொருந்த வழிநடத்தியதால், இந்நாள் வரைக்கும் இஸ்ரயேல் என்னும் ஜாதி அழியாமல் காக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நோக்கம் சரியான வகையில் நிறைவேற்றப்பட்டது. ஒரு வழிக்காட்டியாகவும், நல்ல உபாத்தியராகவும் இருந்து, புதியதோர் கிறிஸ்துவ யுகத்தை துவங்கியது. சொல்லர்த்தமாக, இந்த நியாயப்பிரமாணம் இவர்களை தேவனுடைய ஜனங்களாக இருக்க தகுதிப்படுத்தியது.

இந்த பிரமாணங்கள் இவர்களை தேவனுடைய ஜனங்களாக தகுதிப்படுத்தியிருந்தாலும், அவர்களுக்கு அது ஜீவனை கொடுக்கவில்லை. தங்களுடைய பாவங்களை வெளிப்படுத்தும் கண்ணாடியாக இருந்தது. பாவங்களுக்கு அடிமைகளாக வைத்திருக்கும் நியாயப்பிரமாணத திலிருந்து இந்த ஜாதி விடுதலை பெறவேண்டும் என்று இயேசு தன்னும் வாய்மொழியாக சொன்னவார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில், இயேசு மட்டுமே இரட்சிப்பை கொடுக்க திராணியுள்ளவராக இருந்தார். இந்த ஜாதி நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து வெளியே வருவதற்கு இயேசு மட்டுமே வழியாக இருந்தார் - "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்." (கலா 5:1)

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதைக் குறித்த பிரசங்கங்களை மார்டீன் லூத்தர், நினைவுக்கூர்ந்து, நியாயப்பிரமாணம் ஒருவரையும் பூரணராக்காது என்பதை விசுவாசித்தார். இதில் பவுல் தன்னுடைய வாழ்த்துதல்களை தெரிவிப்பதற்காக மட்டும அல்ல, இந்த விபரங்களைக் குறித்தே முழு புத்தகத்திலும் எழுதியுள்ளார். (கலா 6:11) விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவான், என்ற அடிப்படையில், கிறிஸ்துவுக்குள் தங்களுடைய வாழ்க்கை சார்ந்துள்ளது, என்பதை வசனங்கள் போதிப்பதை அவர் தெளிவாக புரிந்துகொண்டார். மேலும், நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்பியதால் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து அவருடைய இரக்கத்தை இழந்தார்கள். (கலா 5:2-4)

விருத்ததேசனம் உள்ளவர்கள் நியாயப்பிரமாணம் முழுவதையும் கடைபிடிக்க வேண்டும் என்பதை பவுல் எதிர்த்தார் என்பதை மார்டீன் லூத்தர் புரிந்துகொண்டார். நீங்கள் நீதிமான்களாகும்படிக்கு நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து, தேவனுக்கு முன்பாக நேர்மையுள்ளவர்களாக என்றுமே நிற்க முடியாது என்பதை பவுல் சகோதரர்களிடம் வாதாடினார். இதனால் இஸ்ரயேலர்கள் இயேசுவைவிட்டு பிரிந்து, தேவனுடைய கிருபைகளையும் இரக்கங்களையும் அளவற்ற ஆசீர்வாதங்களையும் இழந்தார்கள். இயேசுவே மேசியா என்ற இந்த விசுவாசம் நியாயப்பிரமாணத்திற்கு உட்படவில்லை. ஆனால் இந்த விசுவாசமே தேவனுக்கு முன் நிற்க, நம்மை தகுதிப்படுத்துகிறது.

கலாத்தியர்களுக்கு சொல்லப்பட்ட காரியங்களை நாம் புரிந்துகொண்டால், இஸ்ரயேல் ஜாதிக்காக கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும், அதன் நோக்கங்களையும் பற்றி பவுலின் போதனைகளை மேலும் அதிகமாக புரிந்துகொள்ளலாம். அதன் செயல்பாடுகள் வெளிப்படையாக இருக்கிறது. அந்த ஜாதியின் வழிக்காட்டியாக இருந்தது தெளிவாகிறது. அதில் மீதியிருந்தவர்களை கிறிஸ்துவின் இரட்சிப்பை பெற வழிநடத்தியது. -"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது." (கலா 3:24)

# பிள்ளை பெறாதவளே மகிழ்ந்து பாடு



"சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம். " - கலா 4:28

Tom Ruggirello

உலகத்தின் மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதற்காக தேவன் வடிவமைத்த திட்டத்தின் மூலைக்கல்லாக ஆபிரகாமின் உடன்படிக்கை திகழ்ந்தது. இந்த ஒரு உடன்படிக்கைக்குள் இராஜ்யத்தில், வழக்கத்திற்கு அதிகமான ஆசீர்வாதங்களை வருவிக்க தேவன் பயன்படுத்தும் வழிமுறைகளை நாம் காணலாம். இந்த ஆசீர்வாதத்திற்கு வழிவகுக்கும் ஓர் சந்ததியை உருவாக்க தேவன் வாக்களித்தார்.

மூன்று அடிப்படையான உடன்படிக்கைகள், தேவனுடைய திட்டத்தை வடிவமைக்கிறது - நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை, கிருபையின் உடன்படிக்கை மற்றும் புதிய உடன்படிக்கை. முதல் இரண்டு உடன்படிக்கைகளும் கலாத்தியர் நான்காம் அதிகாரத்தில் மேலோட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் இரண்டு மனைவிகள், சாராள் மற்றும் ஆகாரை இந்த உடன்படிக்கைகளுக்கு உருவகமாக இருப்பதை பவுல் விவரிக்கிறார். பாடத்திற்கு அவசியமில்லாததால், ஆபிரகாமின் மூன்றாவது மனைவி கேத்தூராளை பற்றி அவர் குறிப்பிடவில்லை. சாராள் மரித்த பின் ஆபிரகாம் கேத்தூராளை திருமணம் செய்தார். அவள் அவருக்கு ஆறு குமாரர்களை பெற்றாள். அநேக பிள்ளைகளை அவள் பெற்றெடுத்ததினால், புதிய உடன்படிக்கையை அடையாளப்படுத்தகிறாள். மேலும், கிருபையின் உடன்படிக்கை தன்னுடைய கிரியைகளை முடித்தபின் புதிய உடன்படிக்கை செயல்படும்.

சாராள் மற்றும் ஆகாரின் சூழ்நிலைகளை நாம் கவனித்தால், சாராள் தன்னுடைய முதிர்வயது வரைக்கும் அநேக நாட்கள் மலடியாக இருந்தாள். அவள் பிள்ளை பெறும் வயதை கடந்ததினால், தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற, தன்னுடைய அடிமை பெண்ணாகிய ஆகாரிடம் பிள்ளை பெற்றுகொள்ளும்படி ஆபிரகாமுக்கு ஆலோசனை கூறினாள். இவர்களுக்கு பிறக்கும் பிள்ளை தேவனுடைய சந்ததியாக இருக்கும் என்று சாராள் நம்பினாள். ஆனால் இது தேவனுடைய நோக்கமாக இருக்கவில்லை. அந்த சந்ததியை சாராள், பெற்றெடுக்கவேண்டும் என்று தேவன் வாக்களித்தார். தொண்ணூர் வயதான சாராள் ஈசாக்கை மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றெடுத்தாள். (ஆதி 21:6)

இந்த அனுபவங்களை மையப்படுத்தி தேவன் இந்த இரண்டு ஸ்திரீகளையும், இரண்டு உடன்படிக்கைகளுக்கும், இனி இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை கொண்டுவரும் இரண்டு சந்ததிகளையும் அவர்களின் இரண்டு குமாரர்களுக்கும் ஒப்பிட்டார். ஆகார் அடிமையாக இருந்ததினால், நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறாள் என்று பவுல் கூறுகிறார். அவள் பிள்ளைகள் நியாயப்பிரமாணத்தின், அதாவது இஸ்ரயேல் தேசத்திற்கு கீழ் உருவாக்கப்படும், இந்த பூமிக்குரிய சந்ததியாக இருப்பார்கள்.

## சாராள் சுயாதீனம் பெற்றவள்

சாராளின் சுயாதீனம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆபிரகாமுடன் அவள் கொண்டிருந்த உறவு ஆகாரைக் காட்டிலும் அதிகமாக வேறுப்பட்டது. அவள் நேசிக்கப்பட்ட மனைவியாக இருந்தாள். அவள் குமாரன் ஈசாக்கு அந்த வாக்குத்தத்தத்தின் வழியாக இருந்தான். இருவரும் ஆபிரகாமிடம் கொண்டிருந்த நெருக்கமான உறவுகளை, இஸ்ரயேல் தேவனோடு கொண்டிருந்த உறவையும், இயேசு மற்றும் அவருடைய மணவாட்டி தேவனோடு கொண்டிருந்த உறவையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. இஸ்ரயேல் ஜனங்கள், தேவனோடு தொடர்பு கொள்வதற்கு நியாயப்பிரமாணம் ஒரு வரம்பு வகுத்திருந்தது. ஆனால், ஈடுபலியின் நன்மையானது, ஆதாமின் தீர்ப்பிலிருந்து சபையை விடுதலையாக்கியது. இந்த விடுதலை ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தேவனுடைய புத்திரராக இருப்பதற்கு அனுமதிக்கிறது. பரிசுத்த ஆவி தாராளமாக ஊற்றப்படுவதற்கும், ஆவிக்குரிய நிலைமையை அடையவும் இது வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட பரிசுத்தவான்களின் வாழ்க்கையில் அநேக நன்மையான மாற்றங்களை ஏற்படுத்த, இது வல்லமையாக செயலாற்றுகிறது. கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற சுயாதீனத்தின் பலன்கள் இதுவே. "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்" (கலா 4:26) என்று பவுல் எழுதியுள்ளார். இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் சபை உருவாகிறது. சாராள் கிருபையின் உடன்படிக்கையை சித்தரிக்கிறாள். நம்மெல்லாருக்கும் "தாயானவள்", புது சிருஷ்டியை போஷித்து வளர்ச்சியடைவதற்கு தேவனுடைய கருவியாக பயன்படுத்தப்படுகிறாள்.

## கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்

இந்த இரண்டு உடன்படிக்கைகளையும் பவுல் வேறுப்படுத்தி காட்டுகிறார் - "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்.." (ரோ 6:14) மேலும் "கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே 2:4) என்கிறார். கிறிஸ்துவ வாழ்க்கையில் கிருபை முக்கியமானதொன்றாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக மாறுவதற்கு

தேவனுடைய கிருபையே அனுமதிக்கிறது. இயேசுவின் ஒப்புரவாக்குதலின் பலியின் மூலம் தேவனுடைய கிருபை வெளிப்பட்டது. ஒவ்வொரு உண்மையான விசுவாசிகளிடமும் இக்காரியம் செயல்படுவதை நாம் காணலாம். இவர்கள் ஆபிரகாமின் சந்ததிக்கு பங்குள்ளவர்கள் என்று யாரால் கூறமுடியும் ? பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு அந்த சரீரத்தின் அங்கமாகும் முழு உரிமையை யார் பெறுவது ? இப்படிப்பட்ட உரிமைகளை பெற யாருக்கு தகுதி உண்டு ? தேவனுடைய அளவற்ற கிருபையினால் மட்டுமே இப்படிப்பட்ட வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய திட்டத்திலும், அவருடைய ஞானத்திலும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக மாற "பலியின் உடன்படிக்கையின்" (சங் 50:5)மூலம் பாவிகளுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. இயேசுவின் ஈடுபலியை நாம் கூர்ந்து நோக்கும்பொழுது, இப்படிப்பட்ட பரிப்பூரணத்தை எதிர்பார்க்கும் தேவன் நம்முடைய அபூரணமான பலிகளை அவர் அங்கீகரிப்பார் என்பதை நாம் கற்பனை செய்வதற்கும் மிக கடினமாக இருக்கிறது. ஆகவே நாம் தேவனிடத்தில் பெற்ற கிருபை மட்டுமே, நம்மை ஆபிரகாமின் சந்ததியாக வளர்ச்சியடைந்து முழுமை பெற உதவி செய்கிறது.

ஒவ்வொரு விசுவாசியும் தனித்துவம் வாய்ந்த அந்த அற்புதமான சரீரத்தில் தன்னுடைய பங்கு என்னவென்று சரியாக புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக - "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." (கலா 3:29) என்று பவுல் கூறினார். மேலும், "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்.... இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம். " (கலா 4:28,31) என்றும் கூறினார்.

அநேக கிறிஸ்தவர்கள், விசேஷமாக இன்றைய தினங்களில், இந்த நியாயப்பிரமாணத்தைப் பற்றி அறியாதிருக்கிறார்கள். அது பூரணமான ஒப்புரவாக்குதலின் பலிகளை கொடுக்க இயலாததினால், கிறிஸ்துவுக்குள் பெறப்படுகிற சுயாதீனத்தை போல, நியாயப்பிரமாணம் ஒருகாலமும் சுயாதீனத்தை கொடுக்காது. உண்மையான கிறிஸ்தவனுடைய நம்பிக்கைகளும், அவர்களின் ஆர்வமும் மிக பெரிய அளவில் உள்ளது. ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக இருப்பதே அவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. பாவத்தினால் மரித்துகொண்டிருக்கும் உலகத்தை மீண்டும் ஜீவனுக்கு கொண்டு வந்து, அவர்களை சீர்பொருத்துவதே கிறிஸ்துவ விருப்பங்களின் சாரமாக இருக்கவேண்டும். நமக்கு முன் கிடக்கும் இந்த மகத்தவமும் அற்புதமான வேலைகளை செய்வதற்கு, நாம் பெறும் ஒவ்வொரு சோதனைகளும், அனுபவங்களும் நம்முடைய இருதயங்களை ஆயத்தப்படுத்தி சீர்ப்படுத்தவேண்டும். இதுவே நம்முடைய சிந்தையின் மையபகுதியாக இருக்கவேண்டும். இந்த கிருபையின் பிரமாணத்தின் வழியாக, இது வரைக்கும் நடைபெறாத மிக பெரிய பொதுநலதொண்டில் நாமும் ஒரு பங்கை பெறலாம். மனிதன் வடிமைக்கும் பொதுநலதொண்டுகளை போல இது இல்லை, இந்த திட்டத்தை தேவன் வகுத்ததால், இதில் எந்த விதமான தோல்விகளுக்கும் இடமில்லை. இவையனைத்தையும் நாம் புரிந்துகொண்டு, இதில் சிறப்பான ஒரு பங்கைபெறுவதே நம்முடைய குறிக்கோலாக இருக்கவேண்டும்.

**பிள்ளைபெறாத மலடியே, மகிழந்துபாடு,**

சாராள் தான் மலடியாக இருந்த நாட்கள் முழுவதும் புலம்பிகொண்டு, தேவன் குறித்த காலத்திற்காக காத்திருந்தாள். தேவன் வாக்களித்ததை அவர் நிறைவேற்றுவாரா ? என்ற கேள்வி அவளுக்குள் எழும்பியது. இது அவளுடைய விசுவாசத்திற்கான பரிட்சையாக இருந்தது. அப்படியே, நிஜத்தில் நாம் பார்க்கும்பொழுது, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் வாக்குத்தத்தம் சுமார் 2,200 வருடங்கள் பிள்ளைபெறாமலிருந்தது. நம்முடைய ஆண்டவரின் முதல் வருகையில் இந்த உடன்படிக்கை பிள்ளைகளை பெற துவங்கியது. அதில் நம்முடைய ஆண்டவராம் இயேசு வாக்குத்தத்தத்தின் சந்ததியின் முதல் பிள்ளையானார். அதற்கு பின் கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் தொடர்ந்து இணைக்கப்படுகையில், இந்த உடன்படிக்கை தொடர்ந்து பிள்ளைகளை பெற்றுக்கொண்டேயிருக்கிறது. இந்த சரீர அங்கத்தினர்கள் சொல்லர்த்தமான இந்த உலகத்தை முற்றிலுமாக மாற்றப்போகிறார்கள். இந்த வகுப்பினர் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் எண்ணிக்கை நிறைவேற பொறுமையுடன் காத்திருந்து, இன்று அவர்கள் செய்யவேண்டிய காரியங்களை முழு அர்ப்பணிப்போடு செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த உடன்படிக்கையின் தரிசனம் இந்நாள் வரைக்கும் உறுதியோடு மையப்படுத்தப்படுகிறது.

வாக்குத்தத்தத்தின் சந்ததி வளர்ச்சியடையும்பொது அந்த உடன்படிக்கை பெறும் மகிழ்ச்சியைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி - "பிள்ளைபெறாத மலடியே, மகிழந்துபாடு, கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு, வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசா 54:1) என்கிறார்.

இந்த ஆவிக்குரிய சந்ததி இந்நாள் வரைக்கும் வளர்ந்து ஆயத்தப்பட்டு கொண்டிருக்கிறது. ஆசீர்வதிப்பதற்காக இந்த

உடன்படிக்கை முழு ஆயத்தத்திலிருக்கிறது. அதே அதிகாரத்தில் தேவன் சாராளின் உடன்படிக்கையோடு திருமணம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. (ஏசா 54:5) தேவன் இந்த உடன்படிக்கையை தன்னுடைய மனைவியாக சொல்லுவதன் காரணம் என்னவாக இருக்கும் ? அதவாது இந்த உடன்படிக்கை யேகோவா தேவனின் இருதயத்திற்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கவேண்டும். சாராள் என்பதற்கு "இளவரசி" என்று பொருள். ஆகவே இந்த உடன்படிக்கை அதாவது "இளவரசி உடன்படிக்கை" ஒரு இராஜரீகமான சந்ததியை பிறப்பிக்கும் என்பதை இது காட்டுகிறது. (What Pastor Russell Taught, p. 362) இந்த பரலோக சந்ததி நிறைவடைந்த பின் பூமி ஆசீர்வதிக்கப்படும். ஆகவே - " பிள்ளைபெறாத மலடியே, மகிழந்துபாடு" என்று சொல்லப்படுகிறது.

ஈசாக்கின் பிறப்பு முன் அறிவிக்கப்பட்டபோது, சாராளுக்கு அது நகைப்பாக இருந்தது. துவக்கத்தில் இதை விசுவாசியாமலிருந்தாலும், வெகு சீக்கிரத்தில் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறினபின் இது மகிழ்ச்சியாக மாறியது. இங்கு நமக்கோர் நல்ல பாடம் அமைந்துள்ளது. மிகவும் நன்மையான தேவனுடைய வாக்குத்தங்கள் உண்மையாக இருக்குமா என தோன்றுகிறதா ? அவிசுவாசத்தினால், நாம் எப்பொதாவது சிரித்ததுண்டா ? அல்லது "வாக்குத்தத்தத்தின் சந்ததியின்" ஒரு அங்கமாக மாறுவதற்கும், அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, நமக்குமுன் வைக்கப்பட்டுள்ள காரியங்களை எண்ணி நம்முடைய இருதயத்தை மகிழ்ச்சியினால் நிரப்புகிறோமா?

சாராளின் உடன்படிக்கை மேலும் விருத்தியடைந்து, மேன்மையான பலன் தரும் காலத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி விவரித்திருக்கிறார் - "உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு, உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும், தடைசெய்யாதே, உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய், உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்." (ஏசா 54 :2,3) ஆபிரகாமின் உடன்படிக்கையில், நிழலான ஈசாக்கின் மூலம் வரும் பலன்களை இந்த வசனங்கள் விவரிக்கிறது. மனுக்குலம் புதிய உடன்படிக்கையின் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் போது இந்த கூடாரம் விரிவாக்கப்பட்டு, ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியின் ஒரு பகுதியாக மாறிவிடும்.

## தேவன் தம் பெயரில் ஆணையிடுதல்

தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்திற்கு சம்மந்தப்பட்ட வசன பகுதி, நம்மை சிலிர்க்கவைக்கும் வசன பகுதிகளில் ஒன்றாகும். தேவன் நமக்களித்த வாக்குத்தத்தத்தை நாம் முழுமையாகவும், உறுதியோடும் விசுவாசிக்கவேண்டும் என்று அவர் விரும்பியதை நாம் எபிரெயர் 6:13,16-18 வசனங்களில் காணலாம். " ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு - மனுஷர் தங்களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுவார்கள், உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு. அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலுண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்."

தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவருடைய பிள்ளைகள் முழு நிச்சயத்தோடு இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புவதை இந்த வேத பகுதியில் நாம் காணலாம். மேலும், ஆவிக்குரிய வாக்குத்தத்தத்தின் ஒரு பகுதியாக நாம் மாறுவதற்கான வாய்ப்பை பெற்று, அதை நிறைவேற்றுவதற்கு அவர் நமக்கு இரண்டு காரியங்கள் உறுதியளிக்கிறார். முதலில், அவர் வாக்களித்தார், அதற்குபின், அதை தம்பேரில் ஆணையிட்டார். அவர் தம்முடைய நாமத்தின் மேல் முழுமையாக ஆணையிட்டதால், அவருக்கும்முன் நாம் இந்த வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கவேண்டியது மிக முக்கியமானதாக இருக்கிறது. நாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியாக மாறுவதற்கு நாம் ஆணித்தரமான விசுவாசம் கொண்ட அசையா அஸ்திபாரம் கொண்டிருக்கவேண்டும் என்பதற்காகவே தேவன் இதை ஸ்தாபித்தார். தேவன் எடுத்துகொண்ட இந்த முயற்சியினால், வடிவமைக்கப்பட்டவைகளில், ஆபிரகாமின் உடன்படிக்கையே மிகுந்த பொருத்தமான இணைப்பின் ஒப்பந்தமாக இருக்கிறது.

தேவனுடைய உடன்படிக்கையின் வல்லமையை மற்றும் அதன் முழு குறியிலக்கையும் நாம் உணரும்பொழுது நாம் தவிர்க்கஇயலாத நிலையில் இருக்கிறோம். நமக்கு அளிக்கப்படும் அளவற்ற சிறப்புரிமைகளை பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டும். மேலும் நாம் பெற்ற கிருபைகளை உணர்ந்துகொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே நாம் நம்மையே தத்தம் செய்து தொடர்ந்து நம்மை ஜீவ பலியாக ஒப்புகொடுத்து, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவரோடு கிரியைகளை செய்ய அவருக்கு உடன் பங்காளிகளாக இருப்போம். (ரோ 8:17)

# ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." - எரேமியா 31:31

David Christiansen

தேவனுக்கும் முழு இஸ்ரயேல் ஜாதிக்கும் இடையில் இந்த புது உடன்படிக்கை, ஏற்படுத்தப்பட்டிருப்பதை வசனங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது. ஏனெனில், எரேமியா தீர்க்கதிரிசி இந்த வேத பகுதியை எழுதும்போது பன்னிரெண்டு கோத்திரங்கள் - இரண்டு ஜாதிகளாக பிரிந்திருந்தன. தேவன் தம்முடைய தீர்க்கதரிசியான எரேமியாவின் மூலம், இந்த உடன்படிக்கையில் இவ்விரு ஜாதிகளுக்கும் இணைக்கப்படுவார்கள் என்று ("இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும்") தெளிவுப்படுத்தினார்.

ஆனால் புது உடன்படிக்கை தேவனுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது என்று புதிய ஏற்பாட்டின் சில வசனங்கள் குறிப்பிடுகிறது. இஸ்ரயேல் வீட்டாரோடும், யூதா வீட்டாரோடும் ஏற்படுத்தப்பட்ட புது உடன்படிக்கையும் (எரேமியாவால் உரைக்கப்பட்ட - ஏரே 31:31) , இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு விவரித்த - "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." - புது உடன்படிக்கையும் ஒரே உடன்படிக்கையா ? மேலும், "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்" (மத் 23:38) என்று இயேசு இஸ்ரயேல் தேசத்தை சபித்ததால், தேவனுடைய திட்டத்தில் இஸ்ரயேலர்களுக்கு எந்த விதமான பங்கும் இல்லை என்று இன்றைக்கும் சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

தேவன் இஸ்ரயேல் ஜாதியை நிரந்தரமாக புறக்கணிக்கவில்லை என்று பவுல் கூறுகிறார். "இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே, நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரயேலன்.தேவன் தான் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை... அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது." - (ரோ 11:1,2,5) இஸ்ரயேல் ஜாதி முழுமையாக புறக்கணிக்கப்பட்டிருந்தால், கிருபையினால் அழைக்கப்பட்ட இந்த பரம அழைப்பில் பங்கு பெறுவதற்கு தனக்கும் வாய்ப்பு கிடைத்திருக்காது என்று பவுல் வழக்காடுகிறார். ஆகையால், - "மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன், அதென்னவெனில், புறஜாதியருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்த பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார்.." (ரோம 11:25,26) என்று பவுல் சகல இஸ்ரயேலர்களின் மீட்பைக் குறித்தும் விவரிக்கிறார்.

இஸ்ரயேலர்களை உருவகப்படுத்தும், வெட்டப்பட்ட நல்ல ஒலிவ மரக்கிளைகளில் ஒட்டவைக்கப்பட்ட காட்டு ஒலிவ மரக்கிளைகளாகிய சபையின் எண்ணிக்கை முழுமை பெறுவதை -"புறஜாதியருடைய நிறைவு" என்று இங்கு சொல்லப்படுகிறது. தரிக்கப்பட்ட நல்ல ஒலிவ மரக்கிளைகள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளாத இஸ்ரயேல் ஜாதியையும், அதில் ஒட்டவைக்கப்பட்ட காட்டு ஒலிவ மரக்கிளைகள் புறஜாதிகளையும் அடையாளப்படுத்துகிறார்கள். (ரோ 11:17-20)நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையின் வழியாக "கிருபையினால் பெற்ற அழைப்பின்" ஒரு பகுதியாக மாறுவதற்கான ஒரு வாய்ப்பை இஸ்ரயேல் ஜனங்கள் இழந்துவிட்டார்கள். (ரோ 11:5) ஆனால் அவர்களின் இடத்தில் புறஜாதிகள் ஒட்டவைக்கப்பட்டார்கள். ஒருவேளை, "..அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள், அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே.." (ரோ 11:23) என்றும் பவுல் குறிப்பிடுகிறார். சபை நிறைவுபெறும்பொழுது, தேவன் எஞ்சியுள்ள முழு இஸ்ரயேல் ஜாதியுடன் ஒரு புது உடன்படிக்கையை ஏற்படுத்துவார்.

**புது உடன்படிக்கையின் அவசியம்**

"இவரோ விசேஷித்த வாக்குத்தத தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ் தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லா திருந்தததானால்,

இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்லையே. " (எபி 8:6,7)

பழைய நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கையில் ஏதாகிலும் தவறுகள் இருந்ததா ? "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம்..." (ரோம 8:3) என்று பவுல் விவரிக்கிறார். முதலில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையில் சம்மந்தப்பட்டிருந்த மூன்று குழுவினரால் - (தேவன், இஸ்ரயேல், மோசே) - பிரச்சனைகள் ஏற்பட்டது. இவர்களில் தேவன் மட்டுமே பூரணராக இருந்தார். மோசே மற்றும் இஸ்ரயேலர்கள் அபூரணர்களாக இருந்தார்கள். இந்த இரு தரத்தினரால் நியாயப்பிரமாணம் பலவீனமானது. ஆனால் நியாயப்பிரமாணம் தன்னில் தான் "பரிசுத்தமும், நீதியும் நன்மையுமானது" என்று நாம் அறிந்திருக்கிறோம். (ரோ 7:12) மனிதனின் அபூரணத்தினால், ஜீவனுக்கு ஏதுவான பிரமாணம், மரணத்திற்கு ஏதுவானதாக மாறியது. (ரோ 7:10) ஆகவே, மனிதனின் அபூரணத்தை மேற்கொள்ள "விசேஷித்த வாக்குத்தத்தங்களோடு " ஒரு புதிய உடன்படிக்கை தேவைப்பட்டது.

## விசேஷித்த வாக்குத்தத்தங்கள்

நியாயப்பிரமாண உடன்படிக்கையை கீழ்படிந்தால், உபாகமம் 28ம் அதிகாரத்தில் தேவன் அநேக காரியங்களை வாக்களித்திருக்கிறார். பூமியின் மேலுள்ள சகல ஜாதிகளுக்கும் மேல் இஸ்ரயேலை ஆசீர்வாதமாக வைப்பேன் என்றும், அவர்களை பட்டணத்திலும், வெளியிலும் ஆசீர்வதிப்பதாகவும், மேலும் அவர்களின் கர்ப்பத்தின் கனியும், நிலத்தின் கனியும், மாடுகளின் பெருக்கமும், ஆடுகளின் மந்தைகளுமாகிய மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் கூறினார். "உனக்கு விரோமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறிய அடிக்கப்படும்படி ஒப்புக்கொடுப்பார், ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள், ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்." (உபா 28:7) என்றும் வாக்களித்தார். இஸ்ரயேலர்கள் அபூர்ணர்களாக இருப்பதை அறிந்த தேவன் அவர்களுக்கு மோசே என்ற ஒரு மத்தியஸ்தரை ஏற்படுத்தினார். (உபா 5:2-5) இவைகள் நம்புவதற்கரிய வாக்குத்தத்தங்களாக இருந்தது. இன்னும் விசேஷித்ததாக எப்படி இருக்க முடியும் ?

எபிரெயர் 8:6ம் வசனத்தில் "விசேஷித்த" என்ற வார்த்தைக்கு, எபிரெய பதத்தின் பொருள் "அதிக பயனுள்ள, அதிக உதவியுள்ள, அதிக நன்மையான" என்பதாகும். புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் கிறிஸ்து. "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம், ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். "(எபி 9:14,15) வருங்காலத்தில் வேறொரு மத்தியஸ்தர் வருவார் என்று மோசே முன்னறிவித்தார். "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார், அவருக்குச் செவிகொடுப்பீர்களாக." (உபா 18:15,18,19) தேவனுடைய குமாரனே அந்த மத்தியஸ்தர் என்று பேதுரு உறுதிப்படுத்துகிறார். (அப் 3:22-26) தேவன் இஸ்ரயேலர்களுக்கு ஒரு விசேஷித்த மத்தியஸ்தர் மூலமாக ஒரு விசேஷித்த வாக்குத்தத்தை கொடுத்தார்.

தேவன் நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேலுக்கு கொடுக்கும் போது, ஆதாமின் பாவத்தினால் இந்த உலகம் சாபத்திற்குள் இருந்தது. (ஆதி 3:17-19) சபை நிறைவடையும்போது, இந்த சாபம் நீக்கப்படும், அப்பொழுது தேவன் புது உடன்படிக்கையை இஸ்ரயேலுடன் ஏற்படுத்துவார். "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்." (வெளி 22:3) குறித்த காலம் வரும்பொழுது பூமியின் மேலிருந்த சாபம் நீக்கப்படும். அப்பொழுது ஏதேன் தோட்டத்திலிருந்தது போல இந்த முழு உலகமும் திரளான பலனை பெறுவார்கள்.

புது உடன்படிக்கையின் கீழ் இஸ்ரயேல் ஜனங்கள் அனுபவிக்கக்கூடிய இந்த "விசேஷித்த வாக்குத்தத்தங்களை" குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி சில விபரங்களை கொடுத்திருக்கிறார். "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார். இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை

ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் (திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன், அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து,) திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன், நான் அவர்களக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோ 9:11-15)

ஆமோஸ் வேறு இரண்டு "விசேஷித்த வாக்குத்தத்தங்களை" கண்டுபிடித்தார். முதலாவது, தேவன் அவர்களுடைய தேசத்தை திரும்பக்கொடுத்தார், இனி ஒருவரும் அவர்களை அங்கிருந்து விரட்டமுடியாது. இந்த தீர்க்கதரிசனம் 1878ம் வருடத்திலிருந்தே நிறைவேறிக் கொண்டுவருகிறது. ஆனால், தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசங்களை முழுமையாக இன்னும் இஸ்ரயேல் கைப்பற்றவில்லை. (எண் 34) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசம் முழுவதையும் அவர்கள் இதுவரைக்கும் பெறவில்லை. தாவீது அல்லது சாலோமோனின் காலத்திலும் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை. ஆனால் புது உடன்படிக்கை செயலாற்றும்போது இந்த வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவடையும். "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு.." என்பதை இரண்டாவது "விசேஷித்த வாக்குத்தத்தமாக" ஆமோஸ் இங்கு சுட்டிக்காட்டுகிறார். காலப்போக்கில் இந்த உலகத்தில் உள்ள முழு தேசங்களும் இந்த புது உடன்படிக்கையின் கீழ் வரும் என்பதை இது பொருள்ப்படுத்துகிறது.

## புது உடன்படிக்கையும் புறஜாதியரும்

ஆமோஸ் 9:11,12ம் வசனங்களை யாக்கோபு மேற்கோள் காட்டி, புது உடன்படிக்கையில் ஒரு கால திட்டத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறார். "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப்பின்பு, திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. (அப் 15:14-17) " நான் இதற்குப்பின்பு, திரும்பிவந்து," என்று சொற்றொடரை யாக்கோபு பயன்படுத்துகிறார். "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துக்கொண்ட பின்பு" என்றே இந்த வேத பகுதி பொருள்படுகிறது. (அப் 15:14) சபை நிறைவு பெற்றவுடன் புது உடன்படிக்கை செயலாற்றும். ஆனால், - " மற்ற மனுஷரும்...சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு.." என்று யாக்கோபு மேலும் கூறுகிறார். இந்த புது உடன்படிக்கையை தேவன் இஸ்ரயேலோடும் அதாவது மீதியான சகல ஜனங்களோடும் ஏற்படுத்துவார். இதை சகரியாவும் ஒத்துகொள்ளுகிறார் - "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு - தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், அகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (சகரி 8:23) இஸ்ரயேலை போல இந்த பூமியின் முழு ஜாதிகளும் தேவனோடு அந்த புது உடன்படிக்கையின் கீழ் இருப்பார்கள். இன்றைய நிலையை காட்டிலும் எவ்வளவு வேறுபாடான மாற்றங்கள் இனி வருகிறதாயிருக்கிறது.

## வடிவமைக்கப்படும் அம்சங்கள்

புது உடன்படிக்கை பலனளிக்கக்கூடிய முதல் பகுதி வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் அல்லது துல்லியமாக சொல்லப்போனால் இஸ்ரயேலுக்கு கொடுக்கப்பட்ட விசேஷித்த வாக்குத்தத்தங்களாக இருக்கிறது. அதை உறுதிப்படுத்துவதே இரண்டாவது பகுதியாக இருக்கிறது. புது உடன்படிக்கையின் "விசேஷித்த வாக்குத்தத்தங்களை" உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட வழி - இயேசுவின் சிலுவை மரணம். "எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும், அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே"

(எபி 9:17) ஆகவே இந்த புது உடன்படிக்கை இஸ்ரயேலோடு ஏற்படுத்தப்பட்டதை, இயேசுவின் மரணமே உறுதிப்படுத்தியது. "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு" (11பேது 1:19) என்று பேதுரு கூறுகிறார். "உறுதி" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டதால், எல்லா தீர்க்கதரிசனமும் நிறைவேறி விட்டது என்று பொருள் அல்ல. மாறாக, தேவன் வாக்களித்தபடி எல்லா தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும் என்று உறுதியளிக்கப்படுகிறது.

புது உடன்படிக்கை செயலாற்ற துவங்கும்பொழுது, இஸ்ரயேலரும், மீதமுள்ள உலக ஜனங்களும் அதனால் பயன்பெற ஒரு வழி தேவைப்படுகிறது. "நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று..." (அப் 24:15) இந்நாள் வரைக்கும் ஜீவித்த அனைவரும் கல்லறையிலிருந்து எழுந்து இஸ்ரயேலரின் தேவனோடு புது உடன்படிக்கையின் மூலம் தொடர்பு கொண்டு, நித்தியமாக வாழ வாய்ப்பளிக்கப்படும்.

"திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள், ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (மீகா 4: 2,3) இஸ்ரயேல் மட்டும் அல்ல, "திரளான ஜாதிகள் புறப்பட்டு வருவார்கள்...." சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் அவர்களுக்கு போதிக்கப்படும். இங்கு சீயோன், மகிமையடைந்த சபையை அடையாளப்படுத்துகிறது. "பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்." (வெளி 14:1, எபி 12:22) இங்கு புது உடன்படிக்கையின் நியாயங்கள் போதிக்கப்படும்.

முழுமையடைந்த கிறிஸ்துவின் மூலம் இஸ்ரயேலின் தலைநகரமான எருசலேமிலிருந்து தேவனுடைய வார்த்தைகள் சகல ஜாதிகளுக்கும் போதிக்கப்படும். "விசுவாசத்தினால் நற்சாட்சிபெற்ற" வகுப்பார் மூலம் பிரமாணங்கள் அனைத்தும் "தேவனுடைய வார்த்தைகளாக" மாற்றப்பட்டு, சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப்படும். (எபி 11:1,2,39) கடந்த காலத்தில் இவர்கள் நீதிமான்கள் என்று சாட்சிபெற்றதினால், இந்த வகுப்பாரை பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் என்று அழைக்கப்படுவார்கள். "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்." (எபி 11:39,40) சபை பெறப்போகும் வாக்குத்தத்தங்களை இந்த விசுவாச வகுப்பினர் பெறுவதில்லை. ஆனாலும், மகிமையடைந்த சபையின் வழியாக இவர்கள் பூரணப்படுவார்கள். பூரணப்படுத்தப்பட்ட இவர்கள் புது உடன்படிக்கையின் நியாயங்கள் மற்றும் ஆசீர்வாதங்களையும் பற்றி ஜனங்களுக்கு அறிவிப்பார்கள்.

இதை தொடர்ந்து மீகா தீர்க்கதரிசி - "அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து.." (மீகா 4:3) கற்றுகொடுக்கப்பட்ட நியாயத்தின்படி ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். இது புது உடன்படிக்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு விசேஷித்த அம்சமாகும் -"உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்." (ஏசா 26:9) இந்த நீதியை கற்றுகொள்ளும்போது மனுக்குலத்திற்குள் அற்புதமான மாற்றங்கள் ஏற்படும் -"அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அறிவாள்களாகவும் அடிப்பார்கள், ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. அவனவன் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலும், தன்தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான், சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று." (மீகா 4:3,4) முழு மனுக்குலம் புது உடன்படிக்கையின் கீழ் கொண்டுவரப்படும் பொழுது, யுத்தம் இருப்பதில்லை, பயமிருப்பதில்லை,

அனைவருக்கும் உணவு ஏராளமாக கிடைக்கும் எல்லாவற்றிற்கும் மேல் பூமியின் மேல் சமாதானம் இருக்கும். கற்றுகொள்வதற்கு எப்படிப்பட்ட ஒரு அருமையான சூழ்நிலை!

மேலும், தேவன் - "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்." (ஏசே 36:26) என்று வாக்களிக்கிறார். இது புது உடன்படிக்கையின் ஒரு பகுதி என்று அப்போஸ்தலர் கூறுகிறார் - "அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது - என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்,அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். " (எபி 8:10) கல்லான இருதயம் மிக கடுமையானது. "..ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்.." (யாத்த 19:8) என்று சொல்லி முடிந்தவுடனே அவர்களின் இருதய கடினத்தாலே விக்கிரகங்களை செய்து, அதை சேவித்தார்கள். ஓய்வு நாளை அனுசரியாமல் போனார்கள். மற்ற ஜாதிகளை போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று கோஷமிட்டார்கள். இன்னும் பல காரியங்களை செய்தார்கள். (11இரா 18:4, 11நாளா 36:21, 1சாமு 8:19)

இஸ்ரயேலர்கள் சதையான இருதயத்தை பொருத்திகொள்ள தேவன் எவ்வாறு உதவி செய்வார் என்று அவர் கூறுகிறார். முதலில் அவருடைய ஆவியை அவர்களுக்குள் ஊற்றி, பிரமாணங்களில் நடக்கசெய்து, அவருடைய நியாயங்களை கடைப்பிடிக்க வழிநடத்துவார். அவர்கள் தங்களுடைய முற்பிதாக்களின் தேசத்தில் தங்குவார்கள். அவர்களின் அசுத்தங்களை தேவன் சுத்திகரிப்பார், இனி ஒருபோதும் பஞ்சம் இருப்பதில்லை. அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளை நினைவுக்கூர்ந்து, அவமானப்படுவார்கள். "கர்த்தராகிய நான் நிர்மூலமானவைகளைக் கட்டுகிறேன் என்றும், பாழானதைப் பயிர்நிலமாக்குகிறேன் என்றும், அப்பொழுது உங்களைச் சுற்றிலுமுள்ள மீதியான ஜாதிகள் அறிந்துகொள்வார்கள்.. " (எசேக் 36 :36)"...மந்தை பெருகுகிறதுபோல் அவர்களில் ம்னிதரைப் பெருகப்பண்ணுவேன்." (எசேக் 36:37)

இஸ்ரயேல் தங்களுடைய பொல்லாத வழிகளையும், கிரியைகளையும் நினைத்து, ஆரோசித்து, வெட்கி நாணுவார்கள் என்று எசேக்கியேல் 36 :31,32ம் வசனங்கள் குறிப்பிடுகிறது. "பொறுமை, ஆரோசிப்பது, நாணுவது" போன்ற வார்த்தைகள் தங்களுடைய மனத்தாழ்மையையும் காட்டுகிறது. அதாவது கடந்த காலத்தில் அவர்கள் தேவனை எப்படியாக எதிர்த்தார்கள் என்று உணரும்பொழுது, அவர்கள் மிகவும் பணிவாகுவார்கள். அப்பொழுது தேவன் அவர்கள் மூலம் கிரியைச் செய்து, புது உடன்படிக்கையின் வழியாக இந்த முழு உலகத்திற்கும் ஆசீர்வாதங்களை கொடுப்பார். உண்மையில், தேவனுடைய புது உடன்படிக்கையின் கீழ் வளர்ச்சியடைவதற்கு மனத்தாழ்மையே தேவைப்படுகிற ஒரு முக்கிய குணமாக இருக்கிறது. "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார், நியாயஞ்செய்து இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்மாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." (மீகா 6:8)

இந்த சூழ்நிலையில் நீண்ட காலமாக இஸ்ரயேல் ஜனங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த மேசியாவை அடையாளம் கண்டுகொண்டு, அழுது புலம்பி, துக்கங்கொண்டாடுவார்கள். "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிபார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரி 12:10) இரண்டாயிர வருடங்களுக்கு முன் தாங்கள் கொலை செய்த இயேசுவை பற்றி அவர்கள் உணர்வடையும்பொழுது, தேவன் கிருபையின் ஆவியை பொழிந்து அவர்களின் கல்லான இருதயத்தை சதையான இருதயமாக மாற்றுவார். ஆயினும், மனுக்குலத்திற்கு சுயாதீனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புது உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருக்க விருப்பமுள்ள இஸ்ரயேலர்கள் மற்றும் உலகத்தார், சரியான முடிவு எடுப்பதற்கு புது உடன்படிக்கையின் அம்சங்கள் அங்கு உதவி மட்டுமே செய்யும். தேவன் ஒருவரையும் அவர்களின் விருப்பத்திற்கு எதிராக கட்டாயப்படுத்துவதில்லை. (வெளி 22:17)

இஸ்ரயேலர்களும் மற்ற ஜாதிகளும் பூரணமான வளர்ச்சியடைய இந்த புது

உடன்படிக்கையின் அம்சங்களும், ஆசீர்வாதங்களும் ஊக்குவிக்கும் கருவிகளாக பயன்படுத்தப்படும். இந்த நிலைமை பூரணப்பட்டப்பின், மனுக்குலத்திற்கு இனி ஒரு மத்தியஸ்தர் அவசியப்படாது. "அதன்பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்.... சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்." (1கொரி 15: 24-26,28) ஒரு புது மத்தியஸ்தர் தேவைப்படாததினால், புது உடன்படிக்கை முடிவடைந்துவிடும் என்று பொருள் அல்ல.

"..அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார்..." (வெளி 11:15) புது உடன்படிக்கையின் மூலம் இந்த முழு உலகத்திற்கு தேவனுடைய நீதி கற்றுகொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய ஜீவனை தொடர்ந்துபெற்றுகொள்வார்கள்.

**கேத்தூராள்-புது உடன்படிக்கையின் நிழலா ?**

மற்ற இரண்டு உடன்படிக்கைகளுக்கும் சாராள் மற்றும் ஆகார் நிழலாக இருப்பதினால், கேத்தூராள் புது உடன்படிக்கையின் நிழலாக இருக்கலாம் என்ற ஒரு கருத்தும், புதிய ஏற்பாட்டில் கேத்தூராளை பற்றி அல்லது அவளைக் குறித்த எந்த விதமான காரியங்கள் ஏதும் சொல்லப்படாததினால் அவள் எதற்கும் நிழலாக இருக்க வாய்ப்பில்லை என்றும் ஒரு கருத்துத் தோன்றுகிறது.

"அப்போஸ்தலர் கேத்தூராளை புது உடன்படிக்கையின் நிழலாக குறிப்பிடவில்லை. இந்த ஒரு காரியத்தை அவர் தவிர்த்தது தெய்வீக உந்துதலாக இருக்கவேண்டும். ஏனெனில், இந்த தெய்வீக நிகழ்ச்சியின் குறிப்பிட்ட காலங்கள் தெளிவாக புரிந்துகொள்வதற்கு ஏற்ற சமயம் அப்பொழுது வரவில்லை." - (Reprints, p. 4440 )

ஒருவர் இந்த கருத்தை ஏற்றுகொண்டாலும், ஏற்றுகொள்ளாவிட்டாலும், கேத்தூராள் ஆபிரகாமுடன் கொண்டிருந்த உறவு, புது உடன்படிக்கையின் ஒரு அருமையான நிழலாக இருக்கிறது. சாராள் மரித்த பின் (கிருபையின் உடன்படிக்கை நிறைவேறின்பின்) அவள் ஆபிரகாமை திருமணம் செய்தாள். ரோமர் 11:25-27ம் வசனங்களில் ஒன்றின்பின் ஒன்றாக சொல்லப்படும் சம்பவங்கள் இதுவே. புறஜாதிகளின் நிறைவு (சபையின் நிறைவு)உண்டாகும் வரைக்கும் இஸ்ரயேலில் ஒரு பகுதி கடினப்பட்டிருப்பார்கள். அதற்கு பின் இஸ்ரயேலோடு புது உடன்படிக்கை (கேத்தூராள்) ஏற்படுத்தப்படுவதினால், அவபக்தி யாக்கோபை விட்டு நீக்கப்படும், இஸ்ரயேலரின் பாவங்கள் மன்னிக்கப்படும். ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கு ரெபேக்காளை திருமணம் செய்த பின் அவர் கேத்தூராளை விவாகம் செய்தார். ஈசாக்கு கிறிஸ்துவுக்கும், ரெபேக்காள் மணவாட்டியாகிய சபைக்கும் நிழலாக இருக்கிறார்கள். சபை நிறைவடைந்து, கிறிஸ்துவின் மணவாட்டிகளாக மாறின பின் புது உடன்படிக்கை துவங்கும் என்பதை இந்த சம்பவம் மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஆகாரை (நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கை) போல கேத்தூராள் நிராகரிக்கப்படவில்லை. அவள் அநேக பிள்ளைகளை பெற்றாள். இந்த புது உடன்படிக்கையே,தேவன் இஸ்ரயேலோடு செய்யும் கடைசி உடன்படிக்கையாகும். இது ஒரு நித்திய உடன்படிக்கையாக இருப்பதினால் இனி எந்த ஒரு உடன்படிக்கையையும் தேவன் ஏற்படுத்துவதில்லை. (எரே 31:35-37)

"ஆபிரகாமின் மனைவியாகிய சாராளை குறித்து மிக தெளிவாக வசனங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அதில் சாராள் அவருடைய மனைவி என்றும், அவளுடைய புத்திரன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி என்றும் விசேஷமாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். ஆகார் மற்றும் கேத்தூராளை பொறுத்தவரையில் அவர்களும் அபிரகாமுக்கு மனைவிகளாக இருந்து அவருக்கு பிள்ளைகளை பெற்றார்கள் என்றும் வேத வசனங்கள் தெளிவாக விவரிக்கிறது. முதல் மனைவியாகிய சாராள் இருந்த காலத்தில் ஆகார் வாழந்ததாகவும், அவள் மரணத்திற்கு பின் கேத்தூராள் வாழ்ந்ததாகவும் பதிவுசெய்யப் பட்டுள்ளது." - (Reprints, p. 4439)

இஸ்ரயேலுடன் ஏற்படுத்தப்படும் புது உடன்படிக்கையின் ஆசீர்வாதமான காலங்களுக்காகவும், காலப்போக்கில் அதின் வழியாக மீதமுள்ள மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படுவதற்காகவும் நாம் எவ்வளவு ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறோம் !

இஸ்ரயேல் மற்றும் யூதாவுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்

# தீர்க்கதரிசனங்கள் மற்றும் எரேமியா 31ம் அதிகாரத்தின் வாக்குத்தத்தங்கள்



"இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி - கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன். " - எரேமியா 31:34 எரேமியா 31ம் அதிகாரத்தின் வசன வாரியான ஆராய்ச்சி Jeff Mezera

இஸ்ரயேலின் இராஜ்யம் வடக்கு மற்றும் தெற்கு என்று பிரிக்கப்பட்ட காலத்திற்கு பின் எரேமியாவின் தீர்க்கதரிசனம் துவங்கியது. திடீர் என்று எப்பிராயீம் விக்கிரகாரதனையை தீவிரமாக ஆதரித்ததே, இந்த பிரிவுக்கு அடிப்படை காரணமாக அமைந்தது. அதற்கு பின் இந்த இருபிரிவினர்களை ஒன்றாக இணைப்பதற்கான நம்பிக்கையற்று போனது. தேவனுடைய பாதுகாப்பின் கீழ் இருத்தரத்தாரும் தங்களை தாழ்த்தி ஒப்புகொடுத்து, தாங்கள் பெற்றிருந்த நியாயப்பிரமாணத்தை மீண்டுமாக கடைபிடிக்காத வரையில், இந்த இருவகுப்பினரும் ஒன்று சேர எந்த வாய்ப்பும் இல்லாதிருந்தது. தேவனோடு அவர்கள் கொண்டிருந்த உறவை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள அவரால் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை முறிக்காமல் இருக்க, பழைய ஏற்பாட்டில் முழுவதிலும் அவர்களுக்கு எச்சரிப்பு வழங்கப்பட்டது. அவர்களின் வரலாற்றில் அநேக முறை, அவர்கள் விசுவாசமாக இருந்தபோது அவர்களை ஆசீர்வதித்தார், பிரமாணத்தை மீறி நடந்தபோது அவர்களை தண்டித்தார். இந்த தண்டனையின் நிமித்தம் அவர்கள் பெற்ற அனுபவங்களினால், தன்னிடம் திரும்புவார்கள் என்று எதிர்பார்த்தார். இஸ்ரயேல் சிதறடிக்கப்படுதல், மீண்டும் கூட்டிசேருதல், அவ்வப்பொழுது வரும் உபத்திரவங்கள், மற்றும் ஆயிரவருட ஆட்சியின் வாக்குத்தத்தங்கள் இவையனைத்தையும் நாம் பார்க்கும்பொழுது, தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையில் தம் சார்பாக அதை ஒரு போதும் முறிக்கவில்லை என்ற காரியம் இந்த அதிகாரத்தில் மிகவும் தெளிவாக உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியவைகளை அவரால் நிறைவேற்ற முடியும் என்பதையும் இந்த உலகத்திற்கு அவர் நிரூபிப்பார்.

முழு இஸ்ரயேல், அதாவது இரண்டு மற்றும் பத்து கோத்திரங்களை கொண்ட ராஜ்யங்களும் தேவனால் சீர்பொருத்தப்படும் என்று எரேமியா 31ம் அதிகாரத்தில் வாக்களிக்கப்படுகிறது. (ஆமோஸ் 3:1) பிரிந்திருக்கும் இஸ்ரயேலை தேவன் மீண்டும் இணைப்பார் என்று அவர் வாக்களித்திருக்கிறார். (ரோ 11:26) இந்த அதிகாரத்தில் அநேக வாக்குத்தத்தங்கள் மேசியாவின் இரண்டாம் வருகைக்கு சம்மந்தப்பட்டிருந்தாலும், அவைகள் எருசலேம் மீண்டும் கட்டப்படுவதோடு நின்றுவிடாமல், அந்த நகரத்தின் பரிசுத்தத்தை திரும்பகொடுக்கப்படும் வரைக்கும் சொல்லப்படுகிறது. எருசலேம் என்றும் உண்மையாக இருக்கும் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசத்திற்கு மட்டும் அல்ல தங்களுடைய தேவனிடத்திற்கும் திரும்புவார்கள்.

எரேமியா ஆசாரிய கோத்திரத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாக இருந்தாலும், தன்னுடைய ஜனங்களின் பாவங்களின் நிமித்தமாகவும், அவர்களின் கொடுமையினாலும், அவர் சொன்ன செய்திகளுக்காகவும் அவர் அநேக உபத்திரவங்களை அடைந்தார். ஆனாலும், அவர் விசுவாசத்தோடு தேவனுடைய சித்தத்தை தொடர்ந்து நிறைவேற்றினார். அநேக முறை அவர் உபத்திரவப்பட்டு, காவலில் அடைக்கப்பட்டு, சித்திரவதை அனுபவித்தார். அவருடைய தீர்க்கதரிசனங்களை துண்டு துண்டாக வெட்டி, கொழுத்தினார்கள். (எரே 36:32) இவ்வளவு காரியங்கள் நடந்தாலும், அவர் பதிவு செய்த தேவனுடைய வார்த்தைகள் இந்நாள் வரைக்கும் நம்மத்தியில் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்த அதிகாரத்தில் உள்ள சம்பவங்கள் நிறைவேறினவுடன், இஸ்ரயேல் மற்றும் இந்த முழு உலகமும், தீமையின் அனுமதித்தலின் காரணத்தையும் அதன் வழியாக வரும் படிப்பினைகளையும் கற்றுக்கொள்வார்கள். பாபிலோன், சாத்தான் மற்றும் தீய சக்திகள் நித்தியமாக அழிக்கப்படும். ஆயிரவருட ஆட்சியின் கடைசி நாட்களில், இஸ்ரயேல் மற்றும் முழு உலகமும் சீர்பொருந்தும் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது. மேலும், திரும்பிக்கொடுத்தல் மற்றும் சீர்பொருந்துதலையும் "கடைசி நாட்களில்" என்ற தீர்க்கதரிசனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இந்த தீர்க்கதரிசனங்கள் ஒரு தேசத்திற்கு மட்டும் உரைக்கப்படாமல், எல்லா ஜனத்திற்கும், எல்லா ஜாதிக்கும் உரைக்கப்பட்டது என்று இந்நாள் வரைக்கும் ஒருவரும் அறியாதிருக்கிறார்கள். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து, இஸ்ரயேல் தேசம்

இன்னும் சீர்பொருந்த துவங்க வில்லை. இனி வருங்காலத்தில் அவர்கள் ஒருமித்த ஜாதியாக சீர்பொருத்தப்படுவார்கள். தெய்வீக முன்அறிவு மட்டுமே, இந்த உலகத்தின் சூழ்நிலைகளையும், சம்பவங்களையும், இஸ்ரயேல் மற்றும் முழு உலகமும் இரட்சிப்பை பெறும் வாய்ப்பை ஏற்படுத்த திட்டங்களை வகுக்க முடியும். ஏனெனில், தேவன் வாக்களித்தால் உண்மையாக இருப்பார்.

## இஸ்ரயேலின் தேவன் - எரேமி 31:1-3

*அக்காலத்திலே நான் இஸ்ரயேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். பட்டயத்திற்குத் தப்பி, மீந்த ஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது, இஸ்ரயேலுக்கும் இளைப்பாறுதலைக்கட்டளையிடப்போகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய், ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.*

இந்த அதிகாரத்தின் துவக்கவசனம் 30ம் அதிகாரத்தின் முடிவில் காணப்படுகிறது. இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த கடைசி நாட்களில், இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் நிறைவேறும் - "கடைசிநாட்களில் அதை உணர்ந்துகொள்வீர்கள்"(எரே 30:24) தேவன் வாக்களித்தபடி, பிரிந்திருக்கும் வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்களான முழு தேசமும், ஒன்றுக்கூட்டப்பட்டு, சீர்பொருத்தி மறுபடியும் கட்டப்படும். எகிப்தியரின் பட்டயத்திற்கு அவர்களை விடுவித்து, அவர்களின் பயணம் வனாந்திர முனையில் நிறுத்தினபோது, அவருடைய நித்தியமான அன்பை அவர் வெளிப்படுத்தியதையும் விசேஷமாக குறிப்பிட்டு, இஸ்ரயேலின் மேல் தேவன் வைத்திருந்த அன்பான பராமரிப்பை இங்கு நினைப்பூட்டுகிறார். வனாந்திரத்தில் தேவன் அவர்களுக்கு வெளிப்பட்டதை மூன்றாம் வசனம் குறிப்பிடுகிறது. அந்நேரத்தில் பகலில் மேக ஸ்தம்பத்தினாலும், இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும், வனாந்திர வழியில் தேவன் அவர்களை வழிநடத்தினார். இப்பொழுது தங்களுடைய வருங்கால நம்பிக்கைக்காக தம்முடைய அன்பினால் அவர்களை தம்மிடத்தில் கட்டி இழுப்பார்.

## இஸ்ரயேல் மீண்டும் கட்டப்படுதல் - எரேமியா 31:4-7

*இஸ்ரயேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய், மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய். மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய், நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள். எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய்க் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள், சத்தத்தைக் கேட்கப்பண்ணி, துதித்து - கர்த்தாவே, இஸ்ரயேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்."*

அநேக உருவகமான காரியங்களின் விபரங்கள் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரயேல் மீண்டுமாக கட்டப்பட்டு, பாடலுடன் நடனமாடி வீதிகளில் களிக்கூருவார்கள். (ஏசாயா 49:13) திராட்சை தோட்டங்கள் மீண்டும் நாட்டப்பட்டு, அதன் பலன்களை அனுபவித்து மகிழ்வார்கள். இவர்கள் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு போனபோது, சேதம் பாழாய்கிடந்த போது, எரேமியாவின் இவ்வார்த்தைகள் எவ்வளவு முரண்பாடாக இருந்திருக்கும். நளிந்து போன வடதேசத்தின் ராஜ்யத்தின் தலைநகரமான சமாரியா மீண்டும் சீரமைக்கப்படும் என்ற நம்பிக்கை அடையாளமாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

திராட்சை தோட்டங்கள் மீண்டும் நாட்டப்பட்டபின் எப்பிராயீமைப் பற்றி (வசனம் -6)இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. எப்பிராயீம் என்பதற்கு "இரட்டிப்பான பலன்" என்று பொருள். ஆகவே நிலத்தின் பலன்களுக்காக இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். நிலத்தின் பலன் மட்டும் அல்ல, இஸ்ரயேலரின் ஆவிக்குரிய நிலைமையும் இரட்டிப்பான பலன் அடையும். மேலும், எப்பிராயீம் சீயோனுக்கு கர்த்தரிடம் திரும்பும் என்று எரேமியா கூறுகிறார். எப்பிராயீம் மட்டும் அல்ல அக்காலத்தில் பூமியில் உள்ள சகல ஜாதிகளும் கர்த்தரிடம் திரும்புவார்கள். (ஏசா 2:2,3, 52:8, எரேமி 50 :4,5, மீகா 4:1-4, சகரி 14:9 -16)

## இஸ்ரயேலை கூட்டிச்சேர்த்தல் - எரேமியா 31:8- 14

*இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன், குருடரும், சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத்தாச்சிகளுங்கூட அவர்களில் இருப்பார்கள், மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள். அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள், அவர்களை வழி நடத்துவேன், அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன், இஸ்ரயேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம்*

*என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான். ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரயேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக்காப்பார் என்று சொல்லுங்கள். கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார். அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள், அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும், அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை. அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள், நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன். ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன், என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

கடைசி நாட்களில், எருசலேமுக்கு எதிராக யுத்தம் செய்ய வடதேசத்திலிருந்து மட்டும் அல்ல, (எசேக் 39:2), சகல ஜாதிகளும் எருசலேமுக்கு எதிராக கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். (சகரி 14:2)

கர்த்தர் "சகல ஜாதிகளையும் அசையப்பண்ணும் அந்நாளில், புறஜாதிகள் சகல தேசத்தாரின் சம்பத்தோடு வருவார்கள்" (ஆகாய் 2:7) உலகத்தில் சகல தேசத்திலிருந்தும், வெள்ளியும் பொன்னும், விலையுயர்ந்த ஆடைகளும் ஏராளமாக இஸ்ரயேல் தேசத்தில் கூட்டிச்சேர்க்கப்படும். (சகரி 14:14) தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கு தேவையான சகலமும் நிறைவாக இருக்கும்.

இஸ்ரயேலர்கள் ஒரு தேசத்திலிருந்து மட்டும் அல்ல உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் திரும்புவார்கள். (வசனம் -8) இஸ்ரயேலர்கள் வனங்காக்கழுத்துள்ளவர்களாக அல்ல, மனத்தாழ்மையோடு தங்களுடைய தவறுகளுக்காக துக்கித்து அழுதுகொண்டுவருவார்கள். (வசனம் -9)அப்பொழுது அவர்களின் அழுகை சந்தோஷமாக (வசனம் 12,13) மாறும். தேவன் அவர்களை "தண்ணீரண்டையில் நடத்துவார்" (வசனம் -9). அவர்கள் நீர்பாய்ச்சலான தோட்டத்தை போலிருப்பார்கள். (வசனம் -12) தேவன் குருடர்களையும், சப்பானியர்களையும், பிள்ளைத்தாச்சிகளையும் "இடறாத செம்மையான வழியிலே" நடத்துவார் என்பதை அவர் வாக்களித்திருக்கிறார். (வசனம் -9) அப்பொழுது இஸ்ரயேல் "நான் அளிக்கும் நன்மைகளால் திருப்தியாவார்கள்"(வசனம் - 14) அவர்கள் அனைவரும் நீரோட்டமான (சத்தியம்) பாதையில் நேராக (பரிசுத்தமான பாதை)நடப்பார்கள். மேலும், அவர்களின் பாதையிலிருந்து தேவையற்ற கற்களும், இடறல்களும் நீக்கப்பட்டதினால், அவர்கள் ஒருவரும் இடறுவதில்லை. இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை இஸ்ரயேல் மற்றும் யூதாவுக்கு மட்டும் எரேமியா தீர்க்கதரிசி விவரிக்காமல், புது உடன்படிக்கையின் ஒழுங்கின் கீழ் வரும் இந்த முழு உலகத்திற்கும் இவைகளை அவர் அறிவித்துள்ளார்.

## ராகேலின் அழுகை - எரேமியா 31:15-22

*ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது, ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார், அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு, உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீர் என்னைத் தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன், என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன், நீரே என் தேவனாகிய கர்த்தர். நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக் கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்துவருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன். எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன், ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது, அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். உனக்குக் குறிப்படையாளங்களை நிறுத்து - உனக்குத் தூண்களை நாட்டு, நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை, இஸ்ரயேலாகிய குமாரத்தியே, திரும்பு, இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு. சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்தமட்டும் விலகித் திரிவாய் ? கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள்.*

ராகேல் எப்பிராயீம் மற்றும் மனாசேவுக்கு பாட்டியாக இருந்தவள். இவர்கள் வடக்கு ராஜ்யத்தின் இரு கோத்திரங்களின் தலைவர்களாக இருந்தனர். ஆனால் இந்த வேத பகுதியில் இவள் பத்து கோத்திரங்களுக்கு ஒரு தாயை போல கருதப்படுகிறாள். அவர் பென்னியமீனை

(ஆதி 35:18,19) பெற்ற பின் மரித்தாலும், அவள் பெத்தலகேமுக்கு அருகில் உள்ள ராமாவிலே அடக்கம்பன்னப்பட்டாள். இங்கு கல்லறையிலிருந்து எழுந்து வந்து, அவிசுவாசத்தினாலும், கீழ்படியாமையினாலும் சிறைபிடிக்கப்பட்ட தன்னுடைய பிள்ளைகளுக்காக அழுவதை போல் சொல்லப்படுகிறது. இவளின் பிள்ளைகள் மரித்திருந்தாலும், (வசனம் - 15) இவர்களுக்காக ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்றும் "உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்ற" நம்பிக்கையை எரேமியா இந்த தீர்க்கதரிசனத்தின் மூலம் அறிவிக்கிறார். (எரே 31:17)

இறுதியாக, உயிர்த்தெழுதலில் - "சத்துருவின் தேசத்திலிருந்து (மரணம்) திரும்பி வருவார்கள்". (வசனம் - 16) அப்பொழுது ராகேல் உண்மையில் தன்னுடைய பிள்ளைகளை கண்டு ஆறுதல் அடைவாள். "கடைசியாக பரிகரிக்கப்படும் சத்துரு மரணம்" (1கொரி 15:26)

இயேசுவின் பிறப்பின் போது பெத்தலேகேமில் குழந்தைகள் வெட்டப்பட்டதை மத்தேயு குறிப்பிடும்பொழுது, எரேமியாவின் ( 31:15) இதே தீர்க்கதரிசனத்தை அவர் சுட்டிகாட்டுகிறார் (மத் 2:17,18) மேலும், புதிய ஏற்பாட்டின் துவக்கத்தில் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையையும் இது வலியுருத்துகிறது. மத்தேயு உயிர்த்தெழுதலைப் பற்றி நேரடியாக சொல்லாவிட்டாலும், எபிரெய வாசகர்களுக்கு பரிட்சையமான ஒரு வேத பகுதியை அவர் இங்கு குறிப்பிட்டார். இதை வாசிக்கும் ஒருவர் உயிர்த்தெழுதல் இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதை புரிந்துகொள்ளலாம்.

இஸ்ரயேல் மனம்வருந்தி, சீர்பொருந்தும் காலத்தில், நன்மை செய்தவர்களும், தீமை செய்தவர்களும் ஒன்றாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்று (யோவான் 5:28,29) வசனங்கள் காட்டுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீதியுள்ள இஸ்ரயேலரோடும், உலகத்தாரோடும் கர்த்தரை துதிக்க சத்துருவின் தேசத்திலிருநது திரும்பி வருவார்கள் என்று விவரிக்கப்படுகிறது. தீமை செய்தவர்கள் மனம்திருந்தி, புதுப்பிக்கப்படுவார்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் எழுந்த பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் மணவாட்டிகளாக இவர்கள் அனைவரையும் ஆட்சி செய்வார்கள். (1கொரி 6 :1,2, வெளி 20:4, 22:17)

வசனம் 18 மற்றும் 19ல் வடக்கு ராஜ்யம் மனம்வருந்தி, சீர்பொருத்தப்படுவதை தெளிவாக விவரிக்கிறது. எப்பிராயீம் அவருக்கு விரோதமாக எவ்வளவு காரியங்கள் செய்திருந்தாலும், தேவன் இந்த மனம்வருந்துதலை ஏற்றுகொண்டதினால் - "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ ?" என்று அவர் குறிப்பிடுகிறார். (ஒசி 11:1,8) லூக்கா 15:11-32ம் வசனங்களில் மனம்திருந்தி, பாவ வாழ்கையிலிருந்து வெளிவந்த கெட்ட குமாரன் அனுபவித்த அதே மனநிலையை இஸ்ரயேலர்கள் பெறுவார்கள். அவனை மன்னித்து ஏற்றுகொண்ட ஒரு நல்ல தகப்பனாக நம்முடைய பிதா அங்கு அவர்களையும் ஏற்றுக்கொள்வார்.

திடிர் என்று சீர்பொருத்தப்பட்ட "குமாரனிலிருந்து" (வசனம் - 20) சூழ்நிலை மாற்றப்பட்டு "சீர்கெட்ட குமாரத்தியைப்" (வசனம் -22) பற்றி இங்கு சொல்லப்படுகிறது. இனி வரக்கூடிய மனந்திரும்புதலை பாராமல், நடந்த தீமையான காரியங்களை பற்றி இந்த வசனம் மையப்படுத்துகிறது. இவர்கள் எந்த சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள் என்றும் தேவன் இனி இவர்கள் மேல் பொழிய போகிற கிருபை மற்றும் மன்னிப்பையும் இது நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

விச்சித்திரமான காரியங்கள் நடப்பதை போல தேவன் இஸ்ரயேலர்களை மீண்டும் கூட்டிசேர்ப்பேன் என்று வாக்களித்தது, நடைமுறைக்கு சாத்தியமில்லாத காரியம் என்பதற்காக "ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள்" - என்ற சொற்றொடர் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சிலர் புரிந்துகொள்கிறார்கள்.

## திரும்பகொடுக்கப்படும் அதிர்ஷ்டங்கள் -எரேமியா 31:23 - 26

*இஸ்ரயேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, அவர்கள் - நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, கர்த்தர் என்னை ஆசீர்வதிக்கப்பட்டவரென்கிற வார்த்தையை யூதாவின் தேசத்திலும் அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள். அதிலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும் பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள். நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன். இதற்காக நான் விழித்துப்பார்த்துக்கொண்டிருக்கிறேன், என் நித்திரை எனக்கு இன்பமாயிருந்தது.*

தெற்கு ராஜ்யத்தில், தேவன் தம்முடைய வாசஸ்தலத்தை தம்முடைய ஜனத்தின் மத்தியில் ஸ்தாபித்து, அதனுடைய எல்லாப் பட்டணங்களின்

மனுஷரும் பயிருடும் செடிகளும் மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருந்து, விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த ஆத்துமாக்களை நிரப்பும் காலத்திற்கு, நம்முடைய கவனம் இப்பொழுது திருப்பப்படுகிறது. (வசனம் 24, மத் 11:28) மீண்டும் அவர்கள் சமாதானத்தோடு ஜீவிப்பார்கள். (எரே 33:12) ஆவிக்குரிய நிலையில், இவர்கள் அனைவரும் ஒரே மந்தையாக, ஒரே போதனையின் கீழ், தேவனுடைய வார்த்தைகளை கடைப்படிப்பார்கள். (எரே 31:34, ஆப 2:14, எபி 8:11) "சிறியோர் முதல் பெரியவர் வரைக்கும், அனைவரும் என்னை அறிந்திருப்பார்கள்".

**வரும் நாட்கள் - எரேமியா 31:27-34**

*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷவித்தினாலும், மிருக வித்தினாலும் விதைப்பேன். அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்ற கர்த்தர் சொல்லுகிறார். பிதாக்கள் திராட்சைக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான், எந்த மனுஷன் திராட்சைக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல, ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்போன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி- கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.*

அந்நாளில் இஸ்ரயேல் மற்றும் யூதாவின் அதிர்ஷ்டங்களை திரும்ப கொடுப்பேன் என்று கர்த்தர் வாக்களிக்கிறார். இவர்களின் எண்ணிக்கை மட்டும் அல்ல, அவர்களின் தேசமும் திரும்ப கொடுக்கப்பட்டு, அவர்களின் பாவங்களை மன்னிப்பதற்காக, அவர்களோடு ஒரு புது உடன்படிக்கை ஏற்படுத்தப்படும். அவர்களின் இருதயம் புதுப்பிக்கப்பட்டால் தேவன் சொல்லிய சகலவிதமான வாக்குத்தத்தங்களும் அவர்கள் மேல் வரும். தேவன் அவர்களுடைய இருதயத்தையும் புதுப்பிப்பதாகவும் வாக்களித்திருக்கிறார். எசேக்கியேல் மற்றும் எரேமியாவின் காலத்தில் - "பிதாக்கள் திராட்சைக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின" என்று வழக்கமாக இஸ்ரயேலில் சொல்லப்பட்ட பழமொழியை அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். "அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான், எந்த மனுஷன் திராட்சைக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" என்று சொல்லப்படும். (31:29,30, சங் 51:5, புல 5:7, எசேக் 18:2,3, மற்றும் யாத் 20:4,5, 34:7, எரேமி 15:4) இங்கு எரேமியா தீர்க்கதரிசி துன்மார்க்கரை தண்டனைக்கு தீர்க்கவில்லை. ஏனெனில், அவர்களை பற்றி எரேமியா 32-18ல் மீண்டும் சொல்லப்படுகிறது. ஆயினும், இந்த தனிநபர்கள் தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருக்க இதை ஒரு சாக்காக சொல்லிவந்தார்கள். ஆனால் வருங்காலத்தைக் குறித்து எரேமியா பேசும்பொழுது, ஒவ்வொரு தனிநபரும் பாவத்தில் பிறந்ததினால் அல்ல, அவன் அவன் தன் தன் பாவத்தினால் சாவான் என்று குறிப்பிட்டார். (எசேக் 33:11)

இஸ்ரயேல் மற்றும் யூதா கோத்திரங்கள் தேவனோடு ஏற்படுத்தின உடன்படிக்கையின் உறவை முறித்தாலும், தேவன் அவர்களை மீண்டும் ஒரு உடன்படிக்கையின் மூலம் அவர்களை தொடர்புகொள்வார் என்று 31ம் வசனம் மீண்டும் வலியுருத்துகிறது. இவர்கள் இருவரோடும் ஒரு புது உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த உடன்படிக்கை கல்லின் மேல் எழுதப்படாமல், அவரை அறியவேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவருடைய இருதயங்களிலும் எழுதப்படும்.

"அந்நாட்களுக்குப்பிற்பாடு" இந்த புது உடன்படிக்கை ஏற்படுத்தப்படும். இது யூத யுகத்திற்கு பிறகோ அல்லது நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு பிறகோ, அல்லது சுவிசேஷ யுகத்தில் இருதயங்களில் எழுதப்படுவதோ அல்ல. ஆனால் சுவிசேஷ யுகத்தின் ஏழு நாட்களுக்கு பின் ஏற்படுத்தப்படுவதாகும். (லேவி 8:33-35) கிறிஸ்துவின்

ஆயிர வருட ஆட்சியில் கர்த்தரின் பிரமாணங்கள் அவர்களின் இருதயங்களில் எழுதப்படும்.

இது இஸ்ரயேல் தேசத்திற்கு மட்டும் அல்ல, இந்த புது உடன்படிக்கையின் கோட்பாடுகளை கடைபிடிக்கும் மற்ற எல்லா ஜாதிகளுக்கும் தேவனுடைய பிரமாணங்கள் இருதயத்தில் எழுதப்படும். (சகரி 8:23, எசேக் 20:37) அந்நாட்களில் அநேக ஜாதிகள் தேவனை தேடுவார்கள் - "திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (மீகா 4:2, ஏசா 2:3, சகரி 8:21-23) தேவன் அவருடைய ஆவியை இஸ்ரயேலின் மேல் மட்டும் அல்ல, (சகரி 12:10) முழு "மனுக்குலத்தின்" மேலும் ஊற்றுவேன் என்று வாக்களித்திருக்கிறார். ( யோவேல் 2:28, அப் 2:17, 18)

அவருடைய பிரமாணங்களை அவர்களின் இருதயத்தில் எழுதும் பொழுது, அவர்களின் குணங்கள் மெருகேறி, தேவனுடைய பிள்ளைகளாக மீண்டும் மாற்றப்படுவார்கள். கர்த்தர் அவர்களை என்றுமே கைவிட்டதில்லை. அவர் எப்பொழுதும் அவர்களின் தந்தையாக இருக்கிறார். அதேபோல், இந்த முழு மனுக்குலத்தின் மேலும் அவருடைய ஆவியை பொழிந்தருள்வார். (யோவேல் 2:28) "நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள், என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. நான் இஸ்ரயேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள், என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை." (யோவேல் 2:26,27)

## சேனைகளின் கர்த்தர் - எரேமியா 31:35-40

*சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் கொந்தளிக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும் சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்துபோனால், அப்பொழுது இஸ்ரயேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரயேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்து விடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இந்த நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும். அப்புறமும் அளவுநூல் அதற்கு எதிராய்க் காரேப் என்னும் மேட்டின் மேல் சென்ற கோவாத்புறமாக சுற்றிப்போம். பிரேதங்களைப் புதைக்கிறதும், சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக்கனைத்தும், கீதரோன் வாய்க்காலுக்கு இப்பலே கிழக்கேஇருக்கிற குதிரைவாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும், அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை என்கிறார்.*

தேவன் இஸ்ரயேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல் போனால் அசைக்கமுடியாத அண்டசராசரத்தின் முழு அமைப்புகளும் அழிக்கப்படவேண்டும் என்பதை 35 -37ம் வசனங்கள் தெளிவாக விவரிக்கிறது. அதற்குபின் மேலே இருக்கிற வானத்தை யார் அளக்கக்கூடும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்களை யாரால் ஆராயக்கூடும் ?

35-40 வசனங்களில் எருசலேமின் நகரங்கள் திரும்ப கட்டப்படும் நாட்கள் வரும், இவையனைத்தும் கர்த்தரால் நடப்பிக்கப்படும்போது, ஜனங்களின் இருதயம் அவர் வசமாக திரும்பும். தம்முடைய ஜனத்தாருக்குள் ஒரு புதிய ஆவியை ஊற்றுவேன் என்று கர்த்தர் வாக்களித்திருக்கிறார் என்று மீண்டுமாக தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அறிவிக்கப்படுவதோடு தீர்க்கதரிசனம் நிறைவடைகிறது. (எரேமி 31:33, எசேக் 11:19)

எருசலேம் பட்டணத்து எல்லைகள் அனானெயேலின் கோபுரம் துவங்கி கோடிவாசல் மட்டும் விரிவாக்கப்படுவதை இந்த வசனங்கள் விவரிக்கிறது. புதிய எருசலேம் நிரந்தரமாக ஸ்தாபிக்கப்படும் என்பதை சொல்லர்த்தமாகவும் நிறைவேற்றப்படுவதாக சகரியா 14:10ம் வசனம் குறிப்பிடுகிறது. இஸ்ரயேல் மற்ற தேசங்களுக்கு மேலாக உயர்த்தப்படும் என்பதை அடையாளமாகவும், தீர்க்கதரிசனமாகவும் சகரியா உரைத்திருக்கிறார். 38:40 வசனங்கள் முந்தய வசனங்களுக்கு தொடர்பில்லாததை போல் தோன்றுகிறது. வரலாற்றில் இந்நாள் வரைக்கும் இஸ்ரயேலின் எல்லைகள் இம்மட்டுமாக விரிவாக்கப்படாததினாலும், "எருசலேம் ... மதில் இல்லாத பட்டணங்கள் போல் வாசஸ்தலமாகும்" (சகரி 2:4) என்று சொல்லப்பட்டதினாலும், இனி வரும் விளக்கங்கள் ஆவிக்குரிய முறையில் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

"அனானெயேல்" என்பதற்கு "தேவன் இரக்கம் காண்பிக்கிறார்" அல்லது "தேவன் கிருபையளிக்கிறார்" என்று பொருள். தேவன் இஸ்ரயேலையும் மற்ற தேசங்களையும் ஆசீர்வதிக்கபோகிறார் என்று மிக நேர்த்தியாக நிழலிட்டு காட்டுகிறது.

"காரெப்" என்ற எபிரேய வார்த்தைக்கு "சொறிபிடித்த" என்று பொருள். ஆகவே, பட்டணத்திற்கு வெளியே வசிக்கும் குஷ்டரோகிகளை இந்த வசனங்கள் விவரிக்கலாம். அரபு மற்றும் சிரியா மொழிகளில் இந்த வார்த்தையை "குஷ்ட்டரோகம்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். அந்த பட்டணத்தின் எல்லை, அதாவது எல்லை புறம்பாக வசித்து வந்த பிணியாளிகளும் அந்நாளில் சொஸ்தமாக்கப்படுவார்கள் என்று நமக்கு நினைப்பூட்டுகிறது. குஷ்ட்டரோகம் பாவத்தை அடையாளப்படுத்துகிறது. ஆகவே இஸ்ரயேலின் பாவங்களும், முழு மனுக்குலத்தின் பாவங்களும் நீக்கப்பட்டு, அனைவரும் குணமாக்கப்பட்டு, பரிசுத்த நகரத்தில் தேவனை தொழுதுகொள்வார்கள் என்பதை "காரெப்" காட்டுகிறது.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் கொல்கொதா. எவ்வளவு அருமையாக காரெப் மற்றும் கொல்கோதா இணைக்கப்பட்டு, ஒருமித்து காட்டப்படுகிறது. அதாவது கிறிஸ்துவின் ஈடுபலியின் மூலம், அவர் சிந்திய இரத்தத்தால் பாவமும் மரணமும் நித்தியமாக அழிக்கப்படும் என்று காட்டப்படுகிறது. (1யோவ 1:7)

நகரத்திற்கு தெற்கே இன்னோம் பள்ளத்தாக்கு (பிரதங்களின் பள்ளத்தாக்) அமைந்துள்ளது. யூதர்கள் இதை அசுத்தமான இடம் (தீட்டுள்ள) என்று கருதினார்கள். ஒருகாலத்தில் அசுத்தமாக இருந்த இடத்தை தேவன் சுத்திகரித்து பரிசுத்த நகரத்தின் ஒரு பகுதியாக அதை மாற்றுவார். இஸ்ரயேல் என்ற அந்த தேசம் பல நூற்றாண்டுகளாக இல்லாமல் இருந்தது. அதாவது உலக வரைப்படத்தில் காணப்படவில்லை. அதனுடைய சத்துருக்களின் மத்தியில் தேவனுடைய வல்லமையினால் மட்டுமே மீண்டும் கூட்டிசேர்க்கப்பட்டது. இந்நாள்வரைக்கும் அவர்கள் தேவனை விசுவாசியாமலிருந்தாலும், இனிவருங்காலத்தில் அவர்கள் முழு ராஜ்யமாக ஆவிக்குரிய நிலையிலும் சீர்பொருந்தப்படுவார்கள் என்று தேவன் வாக்களித்திருக்கிறார். எரேமியாவின் காலத்தில் தேவனுடைய ஜனங்கள் அவர்களை ஆண்டு வந்தார்கள். ஆனால் அவர் இஸ்ரயேலுக்குள் ஏதோ புதுமையான காரியத்தை ஏற்படுத்தபோகிறார் என்று வாக்களித்தார். இஸ்ரயேலுக்கும் மட்டும் அல்ல, இந்த முழு உலகத்தையும் தேவன் அவருடைய புத்திரரைகொண்டு ஒரு புது ஆட்சியை இஸ்ரயேலின் எல்லைகளை தாண்டி, பூமி எங்கும், பூண்டுகள்மேல் வருகிற மழைகளைப்போலவும் ஸ்தாபிக்கப்படும். (மீகா 5:7)

எரேமியா புத்தகத்தில் சொல்லப்படாமல் இருந்தாலும், செனகரிபின் படைகள் கிதரோன் பள்ளத்தாக்கில் அழிக்கப்பட்டு இஸ்ரயேலர்கள் அற்புதமாக மீட்கப்பட்டார்கள் என்று சில அறிஞர்கள் நம்புகிறார்கள். (ஏசா 37:33- 37,11நாளா 32:21,22) ஆயினும், கடந்த காலத்தில் தேவன் அவருடைய ஜனங்களுக்காக செய்த அற்புதங்களை காட்டிலும், இனி வரும் காலத்தில் அவர் நடப்பிக்கபோகிற அற்புதங்கள் மிக அதிகமாக இருக்கும். தேவனை சேவிக்கவும், அவரை விசுவாசியாத அந்நிய ஜாதிகளுக்கு சாட்சி கொடுக்க, சீரமைக்கப்பட்ட இஸ்ரயேலுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். "பின்பு, எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ளும்படிக்கும், கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும் வருஷாவருஷம் வருவார்கள்." (சக 14:16) அந்நாளிலே, ".. கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார், அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்." (சக 14:9) எரேமியா 31ம் அதிகாரத்தின் நிறைவேற்றம், இந்த உலகத்தின் அற்புதமான இரட்சிப்பாக இருக்கும்.

குதிரை வாசலின் வழியாக, இராஜாவின் குதிரைகள் வெளியே சென்று தண்ணீர் குடிக்கும். அதேபோல், அந்நாளில் "ஆவியும், மணவாட்டியும் வா என்பார்கள், கேட்கிறவனும் வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை, இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்." (வெளி 22:17) விருப்பமுள்ள அனைவருக்கும் ஜீவ தண்ணீரை கொடுப்பதே வருங்காலத்தில் கிறிஸ்து மற்றும் அவருடைய சபையாரின் வேலையாக இருக்கும்.

ஆலயத்திற்கு வழிநடத்தும் இந்த வாசல் தெற்கில் இருந்தது. எவ்வளவு நேர்த்தியாக பரிசுத்த நகரம் இங்கு முடிவடைவதை காட்டுகிறது. ஏனெனில், இந்த நகரத்திற்குள் அல்லது இராஜ்யத்திற்குள் அமைக்கப்பட்டவைகள், தேவனை தொழுதுகொள்ளவும், அவரை சேவிக்கும் விருப்பமுள்ளவர்களாக இருப்பார்கள். (சகரி 8:22,23) இரட்சிப்பின் திட்டமானது, இஸ்ரயேலுக்கு மட்டும் அல்ல, யூதாவுக்கும் மற்ற எல்லா ஜாதியாருக்கும் வாக்களிக்கப்பட்டிருப்பதை எரேமியா 31ம் அதிகாரம் முழுவதும் விவரிக்கிறது. (சங் 22:28-31)

மீண்டும் கட்டப்படும் காரியம் இதுவரைக்கும் நடைபெறாத ஒன்றாகும். ஏனெனில், இந்த முழு உலகமும் மீண்டும் கட்டப்படவேண்டும். அதற்குபின் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, இடிக்கப்படுவதுமில்லை. (வசனம் -40) வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும்

தீர்க்கதரிசனத்தின் இன்று

# செய்திகளில் சட்டவிரோதமான குவியலாக கொலைகள்

"அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்." - மத்தேயு 24 :11,12

மனோதத்துவ மருத்துவராக படைத்துறையில் பணியாற்றிய நிடால் மாலிக் ஹாசன், ஹூடு கோட்டையில் பத்தொன்பது போரை கொல்லுவதற்கு முன் "அல்லா ஹூ அக்பா" (கடவுள் பெரியவர் என்று அர்த்தம்) என்று கத்தினாராம்.

ஹாவர்டு அன்ரஹ, அக்டோபர் 19ம் தேதி அன்று நியூ ஜெர்சி மனநோய் மருத்துவமனையில் காலமானார். 1949ல் நியூ ஜெர்சியில் உள்ள காம்டனில் பதிமூன்று நபர்களை கொன்றதன் காரணமாக அந்த மருத்துவமனையில் அறுபது ஆண்டுகளுக்கு மேல் அவர் வாழ்ந்து வந்தார். எத்தகை நோக்கமின்றி இத்தனை நபர்களை மொத்தமாக கொலை செய்ததற்காக அமெரிக்கா அவரை குறிப்பிட்டபோது, இந்த வன்முறை செயலுக்கு பின் அவர் தன்னை மாய்த்துகொள்ளாதது, வழக்கத்திற்கு மாறாகவே இருந்தது.

சமீபத்தில் நடந்த கொலைகள்

* கிலீவ்லாந்தில் வசித்தவர், பதினோரு பெண்களை கொலை செய்து தன்னுடைய தோட்டத்தில் பொதைத்தார்.

* வியட்நாமிலிருந்து குடியேறிய ஒரு நாற்பது வயது நிரம்பிய ஒருவர், தன்னுடைய குறைவான ஆங்கில புலமைக்காக பரியாசம் செய்யப்பட்டபோது, ஆயுதங்களோடு பள்ளிக்கூடத்திற்கு திரும்பி வந்து பதிமூன்று பேர்களை கொன்று தன்னையும் அழித்துகொண்டார்.

* 2007ம் வருடம் தெற்கு கொரியாவை சேர்ந்த ஒருவர், வெர்ஜீனியாக டெக்னிக்கல் யூனீவர்சிட்டியின் (Virginia Tech University) மைதானத்தில், இரு சந்தர்பங்களில், 32 பேர்களை கொன்று, இருபத்தொன்பது பேர்களை காய்ப்படுத்திய பின் தன்னையும் மாய்த்துக்கொண்டார்.

* 1999ம் வருடத்தில் கொலாரடோவில் உள்ள கொலும்பைன் மேற் நிலை பள்ளியை சேர்ந்த இரு மாணவர்கள் 12 மாணவர்களையும் ஒரு ஆசிரியரையும் சுட்டு கொன்று, இருபத்து நான்கு பேர்களை காயப்படுத்தி விட்டு, தற்கொலை செய்து கொண்டார்கள்.

## தொடர்ந்து வரும் தீமை, ஜனங்களை அச்சுருத்தியது

செய்தி தாள்கள், தொலைகாட்சியின் செய்திகள் மற்றும் வார இதழ்களில் வரும் கூட்டமான கொலைகளை பற்றிய செய்திகள் 1976 முதல் 1996 ம் வருடத்திற்குள் இப்படிப்பட்ட கொலைகள் அதிகமாக நடந்தது என்று புலோரிடாவில் உள்ள ஒரு மாநில பல்கலைகழகத்தில் ஆராய்ச்சியில் வெளிவந்தது. மேலும் பெரும்பாலாக கொலைசெய்யப்பட்டவர்களும், காயப்பட்டவர்களும், கொலையாளிகளுக்கு அந்நியராக இருந்தார்கள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

2009 ம் வருடத்தில் நான்கு வாரத்திற்குள் 47 பேர் பலியானார்கள். சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருக்கும் எந்த நகரமும் இதற்கு விதிவிலக்கல்ல.

## தீமையான சிந்தையிலிருந்து கொலைவெறி தோன்றுகிறது

தேவன் இஸ்ரயேலை நோக்கி - " கொலை செய்யாதிருப்பீர்களாக" (யாத் 20 :13) என்றார். "கொலை" என்ற வார்த்தையின் எபிரெய பதத்திற்கு அது மட்டும் பொருள் அல்ல. யாத் 21:12-14 ம் வசனங்களில், பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், கொன்றவனை உடனடியாக கொலைச்செய்யவேண்டும் என்று தேவன் தீர்ப்பளிக்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வாக்கியத்தை இந்த சட்டத்தை தவிர வேறு எந்த சட்டமும் உடனடியாக நிறைவேற்றுவதில்லை.

பாவங்களின் வரிசையில் கொலை செய்வதையும் இயேசு பட்டியலிட்டிருக்கிறார் -"வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும், அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும், கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்." (மத் 15:18-20)

ஆகவே கொலை என்பது ஒரு மனிதனின் உள்ளத்திலிருந்து தோன்றும் பாவங்களின் ஒன்றாகும். முதலாவது தீமையான சிந்தை தோன்றி, அதற்கு பின் கொலைச் செய்யும் கிரியை வெளிப்படுகிறது என்று இயேசு சொன்னதை சற்று கவனித்து பாருங்கள். தீமையான சிந்தை கருத்தரித்து, வளர்ச்சியடையும் போது அது கொலை வெறியில் நம்மை கொண்டு சேர்க்கும். சிந்தையில் உள்ள குணங்களே நம்முடைய வாழ்க்கையின் குணங்களாக மாறுவதை இயேசு சுட்டிகாட்டுகிறார். கொலை பாதகத்தை வருவிக்கும் தீமையான சிந்தையிலிருந்து நம்மை விடுவிப்பதற்கு இருதயத்தின் சிந்தைகளை மாற்றுவதே ஒரே வழியாக இருக்கிறது என்று இயேசு கற்பிக்கிறார்.

## தேவனுடைய தீர்வு

"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம், ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோவான் 5:38,39)என்று இயேசு கூறுகிறார். மனிதனாக பிறந்த ஒவ்வொருக்கும், இந்த உயிர்த்தெழுதலின் வல்லமையினாலே தேவனுடைய கிருபையை முழுமையாக கற்றுகொள்வதற்கு ஒரு வாய்ப்பளிக்கும். சாதகமான இந்த சூழ்நிலையிலும், நீதியின் பாதையில் நடக்க மறுப்பவர்கள், அதன் பலனை அடைவார்கள்- "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா 6:7)

உயிர்த்தெழுதலின் போது எழுந்திருக்கும் ஒவ்வொரு நபரும் தங்களுடைய பழயை குணங்களோடும், நினைவுகளோடும் எழுதிருப்பார்கள். சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்து விட்டோம் என்று நம்பி தங்களை தாங்களே வஞ்சித்து மாய்த்து கொண்டவர்கள் வரக்கூடிய யுகத்தில் கடந்த கால கிரியைகளுக்கு பழிசுமத்தப்படுவார்கள். அவர்களுடைய இருதயத்தை மாற்றவேண்டியதாக இருக்கும். ஒழுங்கற்று நடந்த தீயோர்கள் சீர்பொருந்துவதற்காகவும், மனந்திரும்புவதற்காகவும் கட்டாயமாக அமர்த்தப்படுவார்கள்.

பூமியின் மேல் சீர்பொருந்தப்பட்ட சிருஷ்டிகளை இனி ஒருவரும் தங்களுடைய தீமையானசிந்தைகளினால் கெடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். சாத்தான், ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு ஆயிரம் வருஷமளவுங் கட்டி பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோடப்படுவான், என்று வெளி 20:2ம் வசனம் குறிப்பிடுகிறது.

இன்றைக்கு அதிகபட்சமான தீமையும் பாவமும் மனிஷனுடைய இருதயங்களை ஆண்டுகொள்வதற்கு சாத்தானின் தூண்டுதலே காரணமாக இருக்கிறது. அவன் முற்றிலுமாக அகற்றப்படும்பொழுது - "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசா 11:9) அக்காலத்திலே -"நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்." (ஏசா 32:17)

அந்த நாளுக்காக நாம் தேவனை போற்றுவோம் !

### தீர்க்கதரிசனத்தில் இன்று

# பல இடங்களில் பூமி அதிர்ச்சி

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், **பூமியதிர்ச்சிகளும்** பல இடங்களில் உண்டாகும் - மத் 24:7

பூமியதிர்ச்சி என்ற வார்த்தை இருபத்து நான்கு முறைகள் வேதாகமத்தில் காணப்படுகிறது. இயேசு இதை உருவகமாக பேசியிருக்கலாம் என்று சிலர் கருதினாலும், மத்தேயு 24ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறபடி, முடிவு காலத்தை அடையாளப்படுத்தும் ஒரு அடையாளமாக இயேசு குறிப்பிட்டார்.

இயற்கையாக, பூமியின் அடுக்களின் அசைவினால் பூமியதிர்ச்சிகள் உருவாகிறது. கண்டங்களில் மிகபெரிய அடுக்குகள் அசையும்போது, ஒரு சிறிய காலத்திற்கு ஒன்றோடு ஒன்று வேகமாக மோதி அதே நிலையில் இருக்கும். ஆனால் காலப்போக்கில் பூமியின் மேல் அழுத்தம் கூடும்போது, மிக பெரிய அதிர்வுகள் பூமியதிர்ச்சியை ஏற்படுத்தும். இதே செயல்முறை கடலின் கீழ் காணப்பட்டால் அது சுனாமியை உருவாக்கும். கடந்த 2004, டிசம்பர் 26ம் தேதி அன்று வட சுமித்திராவின் மேற்கு கரையில் 9. 3 அளவில் பூமியதிர்வு ஏற்பட்டதை நாம் அறிவோம். அளவில் ஒப்பிட்டு பார்க்கும்போது, இதுவே இரண்டாவது முறையாக இடம் பெற்ற பூமியதிர்ச்சி என்று நிலை நடுக்கத்தின் தொலைவிடம் பதிவு செய்துள்ளது.

இதற்கு முன் சம்பவித்ததைவிட இக்காலத்தில் அதிகமான பூமியதிர்ச்சிகள் நடப்பதாக தோன்றுகிறது. ஒருவேளை பூமியத்திர்வுகளை உணரக்கூடிய கருவிகளால் இன்று அதிகமாக பயன்படுத்துவதினால் இதை ஜனங்கள் உணரலாம். ஆயினும், இன்றைய ஜனபெருக்கத்தினால் நிலநடுங்களை தாக்கக்கூடிய இடங்களில் கட்டப்பட்டிருக்கும் மிக பெரிய கட்டிடங்களினால், வரக்கூடிய பூமியதிர்ச்சிகள் பெரழிவை உண்டுபண்ணுகிறது. கட்டிடங்களை கட்டுவதற்கான சட்டங்களை முறையாக கடைபிடிக்காத இடங்களில், அதிகமாக உயிர் சேதங்கள் ஏற்படுகிறது. 1989 அக்டோபர் மாதம் சான் பிரான்சிஸ்கோவில் 6. 9 அளவில் பூமியத்திர்ச்சி ஏற்பட்டதால் அறுபத்து மூன்று பேர் உயிர் இழந்தனர். ஜனவரி 12ம் தேதி அன்று போர்டு- ஆ - பிரின்ஸ் என்ற இடத்தில் 7.0 அளவில் பூமியத்திர்ச்சி ஏற்பட்டதால் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் போர்களும் மேற்பட்டவர்கள் மாண்டுபோனார்கள். (1 1/2 மில்லியன் பேர்கள் வீடுகளை இழந்தார்கள்)

உள்ளூரில் திடிர் என்ற நடந்த ஒரு ஆபத்தை எடுத்துக்காட்டி கபடமற்ற ஜனங்களுக்கு நேரிடும் தீங்கை, குறித்து நம்முடைய ஆண்டவராம் இயேசு - "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே, எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.... " (லூக்கா 13:4,5) என்று சொன்னார். கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாத ஜனங்கள், இஸ்லாமியர்கள் மற்றும் யூதர்கள் அனைவரும் பஞ்சத்திலும், கொள்ளைநோய்களிலும், பூமியத்திர்ச்சிகளும் மடிந்துபோகிறார்கள்.

**தேவன் தீமையை ஏன் அனுமதிக்கிறார் ?**

நல்ல ஜனங்களுக்கு தீமையான காரிங்கள் சம்பவிப்பது ஏன் ? யோபுவுக்கு ஆறுதல் சொல்ல வந்த நண்பர்கள் அவரை தீயவராக அடையாளம் காட்டி, அவருடைய பயங்கரமான அனுபவங்களுக்கு இதுவே காரணம் என்று நிரூபிக்க வந்தபோதே இந்த கேள்விக்கான பதிலை எதிர்பார்த்து கதறினார்.

தேவன் சர்வவல்லமையுள்ளவராக இருந்தால் இந்த தீமைகள் பல வகையில் கொடுமையான விளைவுகளை ஏற்படுத்திகொண்டிருப்பதை அவர் வேரோடு பிடிங்கி எறிந்திருக்கலாமே என்று சிலர் கருதுகின்றன. ஏனெனில், இவையனைத்தும் அனுமதிக்கப்படுவதினால் தேவனுக்கு வல்லமை இல்லை என்றும் அல்லது அவருக்கு இது இயலாத காரியமாகவும் அல்லது தேவன் என்று ஒருவர் இல்லை என்பதையும் இது நிரூபித்துகொண்டிருக்கிறதே என்றும் சிலர் சிந்திக்கிறார்கள்.

தேவனுடைய நியாயஸ்தனத்தில் அழியக்கூடிய மனுஷன் அமர்ந்த, தேவன் அவருடைய காரியங்களை செய்வது சரியா, தவறா என்று யோசிப்பது எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. மனுஷன் எவ்வளவு குறுகிய பார்வையுடையவனாக இருக்கிறான். "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய் ? நீ அறிவாளியானால் அதை அறிவி ? " (யோபு 38:4) என்று தேவன் யோபினிடம் கேட்டு போல தேவனுடைய காரியங்களை புரிந்துகொள்கிறவர் யார் ?

தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை செயலாற்றுவதற்கு பயன்படுத்தும் இயற்கையான பேரழிவுகளின் காலத்தை பற்றி வேதாகமம் அறிவிக்கிறது. ஆனால் எப்படிப்பட்ட பாவங்களுக்கு தேவன் என்ன தண்டனைகளை கொடுப்பார் என்பதை சொல்லுவதற்கு யாருக்கும் எந்த விதமான அதிகாரத்தையும் அவர் கொடுப்பதில்லை. வேதாக தீர்ப்பின்படி, மனுக்குலத்தின் பெரும்பாலான ஜனங்கள் வெள்ளத்தினால் அழிக்கப்படுகிறார்கள். மேலும் சோதோம் கோமோராவின் மேல் அக்கினியும், கந்தகமும் மழையாக பெய்ந்து அதை அழித்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்பில் தங்களுடைய ஜீவனை இழந்தவர்களுக்கு ஒரு நம்பிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. சோதோமில் வாழ்ந்த ஒழுக்ககேடானவர்களுக்கும் இனி வருங்காலத்தில் உயிர்த்தெழுதல் உண்டு என்று குறிப்பாக சொல்லப்பட்டிருக்கிறது. "உன் சகோதரிகளாகிய சோதோமும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள். சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள், நீயும் உன் குமாரத்திகளும உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள்." (எசேக் 16:55) தேவன் எசேக்கியேலின் மூலமாக இந்த தீர்க்கதரிசனத்தை உரைப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்னே அந்த பட்டணம் புமியின் மேல் காணப்படாமல் போய்விட்டது.

அரசியல் சமுதாயம் ஆகியவற்றில் எல்லாம் மிகசிறந்த நிலையில் இருக்கவேண்டும் என ஆவலோடு எதிர்ப்பார்க்கப்படுகிற மனுக்கலத்தின் ஆசையே, வருங்காலத்தில் தேவனுடைய இராஜ்யமாக ஸ்தாபிக்கப்படும். இது வரைக்கும் வாழ்ந்த ஜனங்கள் அனைவரும் ஜீவனை பெற்று, நீதியை கற்றுகொள்வார்கள். இயற்கையால் ஏற்பட்ட மரணமும் பேரழிவும் இனி இராது. மேலும் - " அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று வளம்பினது." - (வெளி 21:4)

ஒரு கட்டடம் கடிடும் இடத்தில், செயல் முறை திட்டத்தை வகுக்கும் முதல் நாளில் குழப்பமடைந்து, அந்த கட்டட களஞ்னின் திறமையை குறைவாக பதிப்பிடக்கூடாது. ஒரு புதிய அமைப்பை நிலைநிறுத்த, அவ்விடத்தில் உள்ள பழைய அமைப்பு தகர்த்தெரியப்படவேண்டும். கட்டடத்திற்கு தேவையான பொருட்கள் சேர்க்கப்படவேண்டும். அதற்குபின் புதிதானவைகளை கட்டும் பணி துவங்கும். ஏற்ற காலம் நிறைவேறினபின் அந்த கட்டடம் நிறைபெறுகையில் அதன் முழுமையாக அழகுடன் காணப்படும்.

நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் கால்களில் மோதின கல்ல அந்த சிலையை காற்று பறக்கடிக்கும் பதரைபோல தூளாக்கிய காரியம், பழைய அமைப்புகளின் அழிவை அழகாக சித்தரிக்கிறது. அதற்குபின் ".. சிலையை மோதின கல்லோவென்றால்,ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று." (தானி 2:35) என்ற காரியம் வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய இராஜ்யத்தை மிக நேர்த்தியாக சித்தரிக்கிறது.

சர்வவல்லமை நிறைந்த தேவன் ஒருவர் உண்டு. அவர் அனைவர்மேலும் இரக்கமுள்ளவரும், கிருபையளிக்கிறவராகவும் இருக்கிறார். சிலர் விசுவாசத்தின் கண்களினால் இப்போது அறிந்துகொள்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் பூமியின் மேல் உள்ள முழு மனுக்குலமும் இதை புரிந்துகொள்ளும்.